உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 32 ஞாயிற்றுக்கிழமை (17-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:262

# இடைக்கால நிர்வாக யோசனை தொடர்பான புலிகளின் பதில் அடுத்த மாத இறுதிக்குள்!

## சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



கிளிநொச்சி,ஓகஸ்ட்17

**வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசு சமர்ப்பித்துள்ள வரைவு தொடர்பான விடுதலைப் புலிகளின் முடிவு அடுத்தமாத இறுதியளவில் வெளியாகும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

**பி.பி.ஸி. தமிழோசைக்கு வன்னியில் வைத்து வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

அப்பேட்டியில் அவர் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

அரசின் இடைக்கால நிர்வாக யோசனை குறித்து ஆராய்வதற்காக அடுத்த வாரமளவில் நாம் பாரிஸ் செல்லவுள்ளோம். அங்கு பத்துநாள்கள் கலந்துரையாடல் நடைபெறும் என நினைக்கின்றேன்.

அது முடிந்தபின்பு அதனை அடிப்படையாகக் கொண்டு எமது தலைமைப் பீடத்துடன் இரு கிழமைகள் ஆராய்ந்து திருத்தங்களைக் செய்து நிச்சயமாக நாம் அடுத்த மாத இறுதிக்குள் எமது பதிலை வெளியிடக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

எங்களுடைய துறைசார் நிபுணர்கள், சட்ட நிபுணர்கள் அநேகமாகப் பிறநாடுகளிலும் வாழுகின்றனர். அவர்களிடமும் தேவையேற்படின் வெளிநாட்டவர்களதும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களதும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வது மிக இலகுவாக இருக்கும் என்பதனாலேயே பாரிஸில் இந்தக் கலந்துரையாடல்களை நடத்தத் தீர்மானித்தோம்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அண்மைக்காலமாக நாம் ஒவ்வொரு கட்சிகளோடும் கூடி ஆராய்ந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## சர்ச்சைக்கு மத்தியில் வவுனியாவில் 'உலைக்களம்' நூல் அறிமுக விழா

வவுனியாவில் நேற்று நடந்த கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'உலைக்களம்' நூல் அறிமுக விழாவில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றுவது தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டது.

புலிக்கொடி ஏற்றுவதைத் தவிர்க்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கூறினர். எனினும், அங்கு புலிக்கொடி ஏற்றப்பட்டே நிகழ்வுகள் நடந்தன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிக்கொடி ஏற்றுவது போர் நிறுத்தத்தை மீறும் செயல் என்று இராணுவத்தினர் கருதுகின்றனர் என்று கண்காணிப்புக் குழுவினர் புலிகளிடம் தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால், தமது எந்த நிகழ்விலும் தேசியக்கொடி ஏற்றுவது வழமை எனக் கூறிய புலிகளின் வவுனியா அரசியல்துறையினர், அங்கு புலிக்கொடியை ஏற்றி நிகழ்வை நடத்தினர். (ம-6)

## காணியமைச்சர் ராஜித நேற்று குடாநாட்டுக்கு இரகசிய விஜயம்

யாழ்ப்பாணம்,ஓக.17

காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ்.குடாநாட்டுக்கு நேற்று திடீரென இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளார்.

அவர் தனது விஜயத்தின் போது குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயங்களைச் சென்று பார்வையிட்டதாகவும், யாழ். மாவட்ட உயர் அதிகாரிகளை அழைத்துப் பேச்சு நடத்தியதாகவும் கூறப்பட்டது.

எனினும், அமைச்சரின் விஜயம் குறித்த அனைத்து விடயங்களும் மிக இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன. அவர் எங்கு சென்றார் என்ன பேசினார் என்பன போன்ற விடயங்கள் வெளியிடப்படவில்லை.

அண்மையில் யாழ். பல்கலைக் கழகத்துக்கு வந்திருந்த புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத்துக்கு கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டமையும் கடந்த வாரம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து தூதுவர் - தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் இருமணி நேர பேச்சு

### அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வு

கிளிநொச்சி,ஓக.17

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தாய்லாந்து அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இலங்கைக்கான தாய்லாந்துத் தூதுவர் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்த தாய்லாந்துத் தூதுவர் ஜோன் ரிவா யானெண்ட் தலைமையிலான குழுவினர் தரைப் பாதை மூலமாக கிளிநொச்சி சென்றனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தில் தாய்லாந்துத் தூதருக்கும் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் சுமார் 2மணி நேரச் சந்திப்பு இடம்பெற்றது. நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு பிற்பகல் 2 மணிவரை தொடர்ந்தது.

தாய்லாந்து அரசின் உதவியுடன் வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப் படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு தேடுதலில் நேற்று 76பேர் கைது!

கொழும்பு,ஓக.17

கொழும்பில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் 76 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலைமுதல் 76 ரோந்து நடவடிக்கைகள் இடம்பெற்றதுடன் 166 வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு சோதனைகள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் பொலிஸாருடன் இராணுவத்தினரும் இணைந்து செயற்பட்டதாகவும் அந்த அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-6)





வடக்கு - கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்கள் குடியிருப்பு நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ள அதேசமயம், எல்லையோர கிராமங்களான மணலாற்றுப் பகுதியில் இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் இராணுவப் பாதுகாப்புடன் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். அவ்வாறு குடியமர்த்தப்பட்ட சிங்களவர்களின் வீடுகளையும் சிங்களப் பெண்மணி ஒருவரையும் படங்களில் காணலாம்.

### ஐ.தே.முன்னணி அரசை கலைக்கமுன்

## மாகாண சபைத் தேர்தல்களை முதலில் நடத்த ஜனாதிபதி முடிவு

### மக்கள் கருத்தறிய முயற்சி

கொழும்பு,ஓக.17

தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்துவிட்டு புதிய தேர்தல் ஒன்றை நடத்தும் விடயத்தில் அடுத்த ஜனவரி மாதம் வரை பொறுமைகாக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி அதில் மக்களின் கருத்தை நாடிபிடித்து அறிய அவர் திட்டமிட்டுள்ளார்.

தெற்கில் பல மாகாணங்களின் ஆட்சிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது. எனவே, அவற்றுக்கு ஜனவரி மாதமளவில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டியுள்ளது.

தற்போதைய நிலையில் ஜே.வி.பியுடனான கூட்டணியும் அமைக்கப்படுவதற்கான ஏதுநிலையைக் காணவில்லை.

எனவே, எதிர்வரும் ஜனவரியில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி அதன் மூலம் மக்களின் கருத்தை அறிந்துகொள்ள ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

மாகாணசபைத் தேர்தல்களில் முடிவுகள் தமக்குச் சாதகமாக இருந்தால் ஐ.தே.முன்னணி அரசைக் கலைத்துவிட்டு புதிய நாடாளுமன்றத் தேர்தலை ஜனாதிபதி அறிவிப்பார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம)

## சாரதிகளின் அசட்டுப் பிடிவாதத்தால் போக்குவரத்து 30 நிமிடங்கள் ஸ்தம்பிதம்

### கண்டி வீதியில் நேற்றுமுன்தினம் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.17

இரண்டு சாரதிகளுக்கு இடையில் ஏற்பட்ட பிடிவாதம் காரணமாக ஏ-9 கண்டி வீதியில் கைதடிச் சந்தியில் நேற்றுமுன்தினம் சுமார் 30 நிமிடங்கள் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதனால், வீதியின் இருமருங்கிலும் ஏராளமான வாகனங்கள் பயணத்தைத் தொடரமுடியாமல் காத்துநின்றன.


நேற்றுமுன்தினம் மாலை நடந்த இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து பிற்பகல் 3.30 மணிக்கு முகமாலை நோக்கிப் புறப்படத் தயாரான இலங்கை

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்திய 81ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

### போர் பாதித்த மக்கள் வாழ்வை சீர்ப்படுத்த

# சட்டத்திற்கு வெளியேயான இடைக்கால நிர்வாகம் வேண்டும்

## யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,ஓக.17

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்வு சீர்செய்யப்படவேண்டுமானால் சட்டத்திற்கு வெளியேயான இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவேண்டும். இந்த உண்மை நிலையை இலங்கை அரசு புறந்தள்ள முயன்றால் தீமை எமக்கல்ல; அவர்களுக்கே அதிக இழப்பு நேரும்.

- இவ்வாறு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டுறவு தின விழாவில் சிறப்புரையாற்றிய யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் 81ஆவது சர்வதேச கூட்டுறவுத் தின விழா காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து மங்கள விளக்கினை யாழ் மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சி.விஜிதரன் ஏற்றினார்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தமிழீழ நிர்வாக சேவைத்துணைப் பொறுப்பாளர் எஸ். இளஞ்சேரனும், கௌரவ விருந்தினர்களாக திருகோணமலை கூட்டுறவுத் திணைக்கள சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் சி.இளம்பரிதி தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:-

சாதாரண நேரங்களில் எந்த உதவியும் பெரிதாகத் தெரிவதில்லை. ஆனால், நெருக்கடிகள், தடைகள், ஆபத்துக்கள் நிறைந்த அசாதாரண காலத்தில் ஆற்றும் சேவை - உதவி - முக்கியமானது; பெறுமதி மிக்கதாக மதிக்கப்படும்.

வளங்களும், தேவைகளும் மறுக்கப்பட்டு, நாம் புறக்கணிக்கப்பட்ட பொழுது தனது வளங்களை, சேவையை எமது மக்களுக்கு வழங்கியது இந்த கூட்டுறவு அமைப்புத்தான்.

ஒவ்வொரு உயிரினமும், மனிதனும் கடைப்பிடிக்கும் இறைமை, பாதுகாப்பு, செழுமை, முன்னேற்றம் என்பது அந்த மக்களின் வளங்களில்தான் தங்கியுள்ளது.

தமிழரின் இராணுவ பலத்திற்கும் கூட்டுறவுத்துறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. போராட்டத்தோடு, தேசியத்தோடு அது இணைந்து செல்கிறது. எமது வாழ்வு உயர்வுகளில் அவர்களது பங்களிப்பு நிறைய இருக்கிறது. இத்துறைக்கு நாம் தலை வணங்குகின்றோம்.

இந்த மண்ணில் ஒரு விடிவு வரும்போது இத்துறை தன்னிறைவு பெறும். ஊழியர்களின் வாழ்வு நிலை உயர்வு பெறும்.

யாழ்ப்பாணத்தை கையாள்வதன் மூலம் தமிழரின் தேசியத்தை கையாளலாம் என சிங்கள தேசம் நினைக்கிறது. அதனையே இங்கிருக்கும் இராணுவம் செய்துவருகிறது. அதற்கான பல வியூகங்களை அமைத்து தமக்கு அருகில் உள்ள மக்களுக்கு அற்ப, சொற்ப சலுகைகளை கொடுத்து பண்டா நல்லவன், சுனில் பரவாயில்லை என பெயரெடுக்க நினைக்கிறது.

ஆனால், எமது மக்களின் எழுச்சி, மதியூகம் அவர்களின் நினைப்பை தவிடுபொடியாக்கியுள்ளது.

பல இடர்களுக்கு மத்தியில் இடைக்கால நிர்வாக வரைவு ஆலோசிக்கப்பட்டு, சட்டவல்லுநர்களால் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தமிழரின் தாயகம், தேசியம் சுய நிர்ணய உரிமை வழங்கப்பட்டால் இலங்கையில் எல்லாமே நன்றாக நடக்கும்; இல்லையேல் நடக்க வைப்போம்.

சமூக சீரழிவுக்கு காரணமான பலரை இனம் கண்டுள்ளோம். அவர்களுக்கு வேண்டிய 'சிகிச்சைகள்' அளிக்கப்பட்டுவருகிறது. அதற்கும் அவர்களது நோய்கள் மாறாவிட்டால் 'அதி தீவிர சிகிச்சை' கொடுப்போம்.

தேசிய ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அனைவரும் விழிப்படைய வேண்டும். அப்போதுதான் எமது தேசம் விடிவு பெறும். நாகரிகமான, நீதியான துணிச்சல் மிக்க மக்கள் இந்த மண்ணில் வாழ்கிறார்கள் என சர்வதேசமும் கட்டியம் கூறும் - இப்படி இளம்பரிதி தெரிவித்தார்.(ம-30)

## சாவகச்சேரியில் போக்குவரத்து பொலீஸ் பிரிவு

தென்மராட்சி,ஓக.17

சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் மோட்டார் போக்குவரத்துப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பகுதியில் அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதும் வாகன விபத்து முறைப்பாடுகளை பதிவு செய்வதும் இப்பிரிவின் பணிகளெனவும், இப்பிரிவில் தமிழ் பொலீஸார் பணியாற்றுவதாகவும் பொறுப்பதிகாரி எஸ்.பீ.என்.சுபேரத்ன தெரிவித்தார்.

இப்பொலீஸ் நிலையத்தில் ஏற்கனவே பெண்கள், குழந்தைகள் பிரிவு தனியாகவும், முறைப்பாட்டுப் பிரிவு தனியாகவும் தமிழ் பொலீஸாருடன் இயங்குவது குறிப்பிடத்தக்கது. (ம-117)

## நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.17

வாசு தேவலிங்கம் முத்தழகன் எழுதிய 'புலம்பெயர்ந்தவர்களின் புலம்பல்' கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்த்துவார்.(எ-ரி)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.17

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப் படக் காட்சித் தொடரில் "சிட்னி லுமெற்" இயக்கிய "MURDER ON THE ORIENT EXPRESS" என்னும் ஆங்கிலத் திரைப்படம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார்.

அகதா கிறிஸ்ரியின் நாவலை அடிப்படையாகக் கொண்ட இப்படம் தமிழ் உபதலைப்புகளுடன் காண்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (எ)

### ஒரு கோடி ரூபா செலவில்

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் மன்னாரில் புனரமைப்புத் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.17

மன்னார் மாவட்டத்தில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபா செலவில் பல்வேறு புனரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன்மூலம் மடுப் பிரதேசத்தில் உள்ள குளங்கள், வாய்க்கால்கள் புனரமைக்கப்படவுள்ளதுடன், மன்னார் பிரதேசத்தில் உள்ள பாலர் பாடசாலைகள் உட்பட அனைத்துப் பாடசாலைகளும் புனரமைக்கப்படவுள்ளன. அத்துடன் இளைஞர், யுவதிகளுக்கான பொதுவான தேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவும் ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மடு மாதா ஆலயத்தின் வருடாந்த உற்சவ தினத்தன்று புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட முன்னாள் ஆயர் அருட்திரு. இராயப்பு ஜோசப், மடுமாதா ஆலயத்தின் பீலிக்ஸ் அடிகளார், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே.விஸ்வலிங்கம், மன்னார் பிரதேச செயலர் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஏ.எட்வேர்ட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மடுமாதா ஆலய வருடாந்த உற்சவத்தில் கலந்துகொண்ட 4 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் முன்னிலையில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(ம-10)

## களவாக மணல் ஏற்றி வந்த டிராக்டர் பொலீஸாரிடம் சிக்கியது!

தென்மராட்சி,ஓக.17

அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமாக மணல் ஏற்றிவந்த டிராக்டரை சாவகச்சேரி பொலீஸார் சரசாலைப் பகுதியில் வைத்துப் பிடித்துள்ளனர்.

ரோந்துப் பணியில் ஈடுபட்ட பொலீஸார் நேற்றுமுன்தினம் இந்த டிராக்டரைக் கைப்பற்றி பொலீஸ் நிலையத்திற்கு கொண்டுவந்துள்ளதாக பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பீ.என்.அபேரத்ன தெரிவித்தார். (ம-117)

## போட்டிப் பரீட்சை திகதியில் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஓக.17

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் என்று மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் வே.பொ.பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மேற்படி பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது பரீட்சைத் திகதி மறுநாள் 31ஆம் திகதியாக மாற்றப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அனுப்பிவைக்கப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சார்த்திகள் [illegible] களில் மாற்றம் எதுவும் இல்லை என்று அதில் உள்ளது. (எ)

# கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நேற்று ஷெல்கள் மீட்கப்பட்டன

## சிரமதானத்தின்போது சம்பவம்

தென்மராட்சி,ஓக.17

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நேற்று சாவகச்சேரி நகரசபை ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட சிரமதானத்தின போது அங்கு வெடிக்காத நிலையில் பற்றை மறைவுகளில் காணப்பட்ட பல ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மயானத்தில் தகனம் செய்ய அனுமதிக்கப்பட்ட பகுதியின் சுற்றாடலில் காணப்பட்ட பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டன.

அப்போது பற்றைகளுக்குள் ஷெல்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை ஊழியர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக அருகில் உள்ள படைமுகாம் பொறுப்பதிகாரிக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டது. அங்கு வந்த படையினரால் அவை மீட்கப்பட்டன.

கடந்த மூன்று வருடங்களாக இந்த மயானம் படையினரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இந்த மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக செல்வோர் குறிப்பிட்ட இடத்திற்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படாததும் குறிப்பிடத்தக்கது.

(ம-117)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரி ஊழியருக்கு சுவிஸில் இருந்து 500 கையுறை

யாழ்ப்பாணம்,ஓக.17

சுவிஸில் வசித்துவரும் இலங்கைத் தமிழர் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு 500 கையுறைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

வரதபாலன் என்பவரே இவ்வாறு 500 கையுறைகளை தனது 'அன்பளிப்பாக அனுப்பிவைத்துள்ளார்.

மேற்படி கையுறைகள் அடங்கிய பொதியை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளரிடம் கையளித்துள்ளார்.

கையுறை இல்லாத நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலை ஊழியர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் கடமைபுரிவதாக அறிந்ததையடுத்தே குறிப்பிட்ட நபர் இவற்றை அனுப்பி வைத்துள்ளார் என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(எ)

# மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் மருத்துவ முகாம்

## அயர்லாந்து நிபுணர்கள் வருகை

யாழ்ப்பாணம்,ஓக.17

மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு சிகிச்சை தொடர்பான ஆலோசனைகளை அளிப்பதற்கான மருத்துவ முகாம் ஒன்று நாளைமுதல் தொடர்ந்து ஐந்து நாள்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. அயர்லாந்து நாட்டில் இருந்துவரும் விசேட நிபுணர்கள் இந்த மருத்துவ முகாமை நடத்தவுள்ளனர்.

யாழ். பரியோவான் கல்லூரியில் இந்த மருத்துவ முகாமை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கான சிகிச்சையில் நிபுணத்துவம் வாய்ந்த 9 பேர்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்துகொள்கின்றனர்.

மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளைப் பரிசோதித்து அவர்களின் உடல்நல மேம்பாட்டுக்கான பயிற்சிநெறிகள் பற்றியும் சிகிச்சைகள் குறித்தும் அவர்கள் ஆலோசனைகளை வழங்கவுள்ளனர்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிள்ளைகளை மட்டுமே நிபுணர்கள் பார்வையிட உள்ளனர் என்பதால் பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம)

# முன்பள்ளி விளையாட்டு விழா

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கமும், நவாலி இந்து சமய விருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் பாலர் கல்வி நிலைய விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறும்.

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் க.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி பி.பேரானந்தம் கலந்துகொள்வார். (எ-5-15-185)

★ ★ ★

கந்தரோடை ஸ்ரீசுப்பிரமணிய சனசமூக நிலையத்தின் முன்பள்ளி விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 2மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் பிரதேச சபைச் செயலாளர் ந.சிவபாலதர்மகுலசிங்கம், சுன்னாகம் பனை - தென்னை வள அபிவிருத்திச் சங்க முகாமையாளர் சி.சந்திரவதனன், மற்றும் கந்தரோடை கிராமசேவையாளர் க.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்துகொள்வர்.

(எ-5-152-185-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகாரி இடி அமீன் மரணம்!

ஜெட்டா,ஓக.17

ஆபிரிக்க நாடான உகண்டாவில் சர்வாதிகார ஆட்சி நடத்திய இடி அமீன் (வயது-80) சவூதி அரேபியா ஜெட்டா வில் நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

இரத்தக் கொதிப்பு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் கோமா நிலையில் இருந்தார்.

பல்வேறு உடல் கோளாறுகள் காரணமாக இடி அமீ னின் முக்கிய உறுப்புகள் அனைத்தும் செயலிழந்து விட் டன. அவர் இறந்துவிட்டார் என்று மன்னர் 'பைஸல் மருத்து வமனை தெரிவித்தது.

இடி அமீனின் உடல் எங்கு அடக்கம் செய்யப்படும் என்று தெரியவில்லை.

அமீன் வெளிநாட்டில் இறந்தாலும் அவரது உடல் உகண்டாவுக்குக் கொண்டுவந்து இறுதிச் சடங்கு நடத் தலாம் என்று உகண்டா அதிபர் யோவெரி முசேவேனி கூறினார்.

1971ஆம் ஆண்டு ஜனவரி 25இல் உகண்டாவின் அதிபராக இருந்த மில்டன் ஒபோடே வெளிநாடு சென்றிருந்த போது, இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி னார் இடி அமீன்.

அதன் பிறகு, சர்வாதிகார ஆட்சியை நடத்திவந்தார். தன்னை எதிர்ப்போருக்கு மரணதண்டனை வழங்கினார்.

ஒபோடேவின் அமைச்சர்கள், விசுவாசிகள் அனைவரை யும் கொன்று குவித்தார். ஆர்ச் பிஷப், தலைமை நீதிபதி ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

இடி அமீன் ஆட்சியின்போது, ஒரு லட்சம் பேரைக கொன்று குவித்தார் என்று கூறப்படுகிறது. மனித உரிமை அமைப்புகள் அவர் 5 லட்சம் பேரைக் கொன்றார் என்று கூறுகின்றன.



உகண்டாவின் அதிபராக இருந்தபோது கூட்டம் ஒன்றில் உரையாற்றும் இடி அமீன்.

குத்துச்சண்டை வீரரான இடி அமீன் பிரிட்டிஷ் ஆட்சியின் போது இராணுவத்தில் பணியாற்றிவந்தார்.

1979ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்தும், நாட்டிலிருந்தும் விரட்டப்பட்டார் அமீன். முதலில் லிபியா, ஈராக் என்று அடைக்கலம் தேடி, இறுதியில் சவூதியில் தஞ்சம் புகுந்தார். அவர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. சவூதியில் அவர் தனது 4 மனைவியருடன் வசித்து வந்தார்.

(ஒ)

# நேபாளத்தில் இராணுவ நிலை நிலச்சரிவில் சிக்கி 15பேர் பலி!

காத்மண்டு,ஓக.17

நேபாளத்தில் நிலச்சரிவில் இராணுவ நிலை ஒன்று சிக்கியது. இதில் 15 இராணுவத்தினர் உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

தலைநகர் காத்மண்டுவிலிருந்து வடக்கே 95 கிலோமீற்றர்கள் தொலை வில் ரசுவா மாவட்டத்தில் உள்ள ராம்சே முகாமே நிலச்சரிவில் சிக்கியது

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளி ரவு இந்த நிலச்சரிவு ஏற்பட்டது. ஆற் றோரம் உயர்ந்திருந்த மலைப் பகுதி யிலேயே இராணுவ நிலையும், சில வீடுகளும் இருந்ததாகவும் -

மலைப் பகுதி அப்படியே சரிந்து கரைபுரண்டோடி ஆற்றுக்குள் விழுந்த தாகவும் -

அப்போது மேற்புறத்தில் அமைந் திருந்த இராணுவ நிலையும் வீடுகளும் ஆற்றுக்குள் தள்ளப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூன்மாதம்முதல் நேபாளத் தில் கடும் மழை பொழிகிறது. இதில் நிலச்சரிவு, வெள்ளம், இடி போன்ற வற்றால் சுமார் 200பேர் வரை உயிரி ழந்துள்ளனர்.

# சவூதித் தூதரகத்தின் அதிகாரி பிரிட்டனிலிருந்து வெளியேற்றம்!

லண்டன்,ஓக.17

பிரிட்டிஸ் பொலீஸ் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து ரகசியத் தகவல்களை பெற முயன்ற பிரிட்டனுக்கான சவூதி அரேபியத் தூதரக அதிகாரி ஒருவரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு பிரிட் டிஷ் அரசு உத்தரவிட்டுள்ளது.

லண்டனிலுள்ள சவூதித் தூதரகத் தில் புலனாய்வு அதிகாரியாக இருப்பவர் அலி அல் ஷமரனி. பிரிட்டனிலுள்ள சவூதி அரேபியர்களைப் பற்றி பிரிட் டிஷ் பொலீஸார் கணனியில் பதிவு செய்துள்ள தகவல்களைப் பெற இவர் பொலீஸ் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்துள்ளார். இது தொடர்பாக கடந்த மாதம் 16 ஆம் திகதி மேற்கு லண்டனைச் சேர்ந்த ஹம்ரி ஸ்மித், பல்ஹாம் என்ற இரண்டு பொலீஸார் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

தூதரக அதிகாரி அலி அல் ஷமரனி முறைகேடான செயல்களில் ஈடுபட்டதற்காக அவரை நாட்டைவிட்டு வெளியேறும்படி பிரிட்டன் உத்தரவிட் டுள்ளது.

பிரிட்டனின் இந்த உத்தரவால் இரு நாடுகளின் உறவில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. குண்டு வெடிப்பு குறித்த வழக்கொன்றில் ஐந்து பிரிட் டிஷ்காரர்கள் சவூதிச் சிறையில் அடைக் கப்பட்டிருந்தனர். கடந்த வாரம் இவர் கள் சவூதிச் சிறையிலிருந்து விடுவிக் கப்பட்டனர். இந்நிலையில், கடந்த 13 ஆம் திகதி தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதாக கூறி சவூதி அரேபியாவுக்கு செல்லும் பிரிட்டிஷ் விமானங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டன. (ஒ-9)

## ஜெயலலிதாவின் அதிரடி நடவடிக்கை

# வேலை நிறுத்தத்தை தூண்டியதாக கருணாநிதி உட்பட 4 பேர் மீது வழக்கு!

சென்னை,ஓக.17

தமிழகத்தில் அரச ஊழியர் போராட் டத்தைத் தூண்டிவிட்டதாகக் கூறி தி.மு.க. தலைவர் கருணாநிதி, காங்கிரஸ் செயலா தலைவா ஈ.வி.கே.எஸ். இளங் கோவன், இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் ஆர்.நல்லகண்ணு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் என்.



வரதராஜன் ஆகியோர் மீது டெஸ்மா சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது.

சென்னை மத்தியக் குற்றப் பிரிவு பொலீஸார இவ் வழக்குகளைப் பதிவு செய்தனா.

பல்வேறு கோரிக்கைகளை வலி யுறுத்தி கடந்த ஜூலை 2ஆம் திகதி முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை அரச ஊழியர், ஆசிரியர் சங்கங்கள் அறிவித்தன. இப போராட்டத்தை ஒடுக்குவதற்காக ஏற்கனவே இருந்துவந்த அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து தமிழக அரசு அவ சரச் சட்டத்தை (டெஸ்மா) பிறப்பித் தது.


அரச ஊழியர்கள் போராட்டத்திற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தும் அவர்கள போராட்டத்தைத் தூண்டி விடும் வகையில் மீண்டும் மீண்டும் நடந்து கொண்டதாலும் கருணாநிதி, இளங் கோவன், நல்லகண்ணு, வரதராஜன் ஆகியோர் மீது டெஸ்மா சட்டத்தின் 5ஆவது பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

பொதுத்துறைச் செயலர் பிச்சாண்டி அளித்த முறைப்பாட்டின அடிப்படை யில் இவ்வழக்கைப் பதிவு செய்த தாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வழக்குகளைப் பதிவு செய் தது குறித்து சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் பொலீஸார் தெரிவித் துள்ளனர்.

டெஸ்மா சட்டப்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை அல்லது ரூ 5 ஆயிரம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில்



புதிதாகக் கட்டிமுடிக்கப்பட்டு, வடகிழக்கு சீனாவின் தலியான் துறைமு கத்தில் நிறுத்தப்பட்டுள்ள மிகப் பெரிய எண்ணெய்க் கப்பல் இதுதான். இதன் நீளம் 285 மீற்றர், அகலம் 58 மீற்றர். 2.30 லட்சம் தொன் எண்ணெய்யை சேமித்து வைக்கும் திறன் கொண்டது. தினமும் ஒரு லட்சம் பரல் கச்சா எண்ணெய் இக்கப்பலில் சுத்திகரிக்கப்பட வசதியுண்டு.

# சிங்கப்பூரில் வங்கி மோசடி; இந்தியருக்கு 20வருட சிறை!

சிங்கப்பூர், ஓக.17

சிங்கப்பூர் வங்கி ஒன்றில் மூன்றரை கோடி ரூபா மோசடி செய்த இந்திய ருக்கு 20 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தியாவில் பிறந்து லண்டன் பல்கலைக்கழகத்தில் படித்து பொருளா தாரப்பட்டம்பெற்று சிங்கப்பூரில் 'இன்போ சீக்' என்ற நிறுவனத்தின் இயக்குந ராக பணியாற்றியவர் சல்வந்த் சிங் (வயது-41).

இவர் கடனட்டை மூலம் சிங்கப்பூரில் உள்ள 'யுனைடட் ஓவர்சீஸ்' வங்கியில் சுமார் மூன்றரைக் கோடி ரூபா அள வுக்கு மோசடி செய்துள்ளார்.

சிங்கப்பூரில் சல்வந்த்சிங் மீது 765 முறைப்பாடுகள் பெறப்பட்டன. ஏற்கனவே கடந்த 83ஆம் ஆண்டு இவர் மீது 93 குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது இந்தியாவுக்கு தப்பி ஓடிவந்த சல்வந்த் சிங், கடந்த டிசெம்பர் மாதம் கைது செய்யப்பட்டு சிங்கப்பூர் அரசிடம் ஒப் படைக்கப்பட்டிருந்தார்.

தன் குற்றங்களை திருத்திக் கொள்ளாமல் பெருக்கிக்கொண்டே செல்லும் சல்வந்த்துக்கு அளிக்கப் பட்டிருந்த 12 ஆண்டு கடுங்காவல் தண்டனையை 20 ஆண்டாக உயர்த் தும்படி சிங்கப்பூர் அரசு கோரியிருந் தது.

இதனை ஏற்று சிங்கப்பூர் தலைமை நீதிபதி யாங்புங், சல்வந்துக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினார். (ஓ-9)

# இனிவரும் 100 ஆண்டுகளில் ஆர்டிக்கில் பனி உருகிவிடும்!

## ஆய்வாளர் எச்சரிக்கை

ஒஸ்லோ,ஓக.17

ஆர்டிக் பனிப் பிரதேசத்தில் உள்ள பனிக்கட்டிகள் இன்னும் 100 ஆண்டு களுக்குள் முற்றிலும் கரைந்து விடும் என்று சர்வதேச அறிவியல் ஆய்வாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நோர்வேயில், பெர்ஜன் நகரில் உள்ள நொன்சென் ஆராய்ச்சி நிலை யப் பேராசிரியர் ஜோஹன்னஸ்ஸென் வெளியிட்ட ஆராய்ச்சி அறிக்கை அங் குள்ள நாளிதழில் பிரசுரமாகியுள்ளது.

அதில் அவர் கூறியுள்ளதாவது:-

தற்போதைய விகிதத்தில் கார் பண்டை ஒக்ஸைட்டின் வெளியேற்றம் தொடருமானால் பூமியின் வெப்பநிலை அதிகரிக்கும். இதனால் அடுத்த 100 ஆண்டுகளுக்குள் பனிக்கட்டிகள் முற்றிலும் கரைந்துவிடும்.

ஆர்டிக் பிரதேசத்திலுள்ள பனிக்கட் டிகள் 10 ஆண்டுகளுக்கொருமுறை 3 அல்லது 4 சதவீத அளவுக்குக் குறைந்து வருகிறது. இதேநிலை தொடர்ந்தால் அடுத்த நூறு ஆண்டு களில் கோடைப்பருவத்தில் வடதுருவத் தில் பனிக்கட்டிகள் இருப்பது அபூர்வ மாகிவிடும்.

தற்போதைய நிலையை விட கார்பண்டை ஒக்ஸைட்டின் வெளியேற்றம் இன்னும் கூடுதலானால் பனிக்கட்டி கள் இன்னும் வேகமாகக் கரைந்து விடும் எனவே, கார்பண்டை ஒக்ஸைட்டின் வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

ஆர்டிக் பனிப் பிரதேசத்தை செயற் கைக்கோள் மூலம் மேற்கொண்ட ஆராய்ச்சியில் கடந்த 20 ஆண்டுகளில் வடதுருவத்தில் 10 லட்சம் சதுர கிலோ மீற்றர் அளவுக்கு பனிக்கட்டிகள் குறைந்துள்ளமை தெரியவந்துள்ளது. ஆனால், கோடையில் இதன் அளவு 60 லட்சம் சதுர கிலோமீற்றர் ஆகும்.

பனிக்கட்டிகள் முற்றிலும் கரைந்து அதன்மூலம் வெளியேறும் குளிர்ந்த நீரினால் வளைகுடா நீரோட்டத்தில் நிலவும் சீதோஷ்ண நிலை மிகவும் வெதுவெதுப்பான நீரோட்டமாக மாறக் கூடும்.

வளைகுடா நீரோட்டத்தின் மூலம் தான் ஐரோப்பிய நாடுகளின் சீதோஷ்ண நிலையில் மாறுபாடு ஏற்படுகின்றன. அதேசமயம் பனிக்கட்டிகள் கரைந்து உருவாகும் நீர்ப்பெருக்கால் கடல் மட்டம் உயரும் என்பதற்கு வாய்ப்பு குறைவாகவே உண்டு என்றார்.

(ஒ)

## அமெரிக்காவில் மின் விநியோகம் சீரானது

நியூயோர்க்,ஓக.17

அமெரிக்கா மற்றும் கனடாவில் தடைப்பட்ட மின் விநியோகம் மூன்றில் ஒரு பகுதி சீரமைக்கப்பட்டது.

நியூயோர்க் நகரில் மின்விநியோகம் வழங்க தீவிர ஏற்பாடு நடந்து வருகின் றது. இதுவரை மூன்றில் ஒரு பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டது. பெரும்பாலும் இன்று முழுப்பணியும் நிறைவடையும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

# கலிபோர்னிய ஆளுநர் தேர்தலில் ஆர்னோல்ட்டுக்கு எதிராக கிளின்டன்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில ஆளுநர் பதவிக்கான தேர்தலில், தற்போதைய ஆளுநர் கிரேடேவிஸ்க்கு ஆதரவாகவும் நடிகர் ஆர்னோல்ட் டுக்கு எதிராகவும் அமெரிக்க முன் னாள் ஜனாதிபதி கிளிண்டன் வாக்கு வேட்டை நடத்தப்போகிறார்.

ஜனாதிபதி புஷ் ஆர்னோல்ட்டுக்கு ஆதரவு அளித்தபோதும், அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதைத் தவிர்த்து வருகின்றார்.

மேலும் கருத்தடை, ஓரினச்சேர்க் கை போன்ற விடயங்களுக்கு ஆர் னோல்ட் ஆதரவு வழங்குகின்ற போதி லும், புஷ் இவற்றுக்கு எதிரான கருத் துக் கொண்டவர்.

இதேவேளை, புஷ்ஷின் கொள்கைக்கு நேரெதிரான கொள்கையுடைய கிளின் டன் ஆர்னோல்டுக்கு எதிராக களத் தில் இறங்கியுள்ளார்.

## வாஜ்பாய் சாதனை!

புதுடில்லி,ஓக.17

முன்னாள் பிரதமர்கள் ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி ஆகியோருக் குப் பிறகு, தொடர்ச்சியாக ஆறு முறை புதுடில்லி செங்கோட்டையில் இருந்து சுதந்திரதின உரையாற்றிய பெருமை யைப் பெற்றார் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்.

சகோதர, சகோதரிகளே! வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டையிலிருந்து தொடர்ந்து 6 ஆவது முறையாக நான் உங்களிடம் பேசிக்கொண்டிருக்கின் றேன். நீங்கள் என் மீது வைத்தி ருக்கும் பாசமும், எனக்கு அளித்துவ ரும் ஆதரவும்தான் இதற்குக் கார ணம் என்று வெள்ளிக்கிழமை நாட்டு மக்களுக்கு சுதந்திரதின உரையாற் றுகையில் வாஜ்பாய் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

மோட்டரோலா
தொலைபேசி இணைப்பு
உடன்
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
**021-222 2874**
(21505) (21-11-18)


# ஆஸ்பத்திரி கிளினிக் தினங்களில் 25ஆம் திகதி முதல் மாற்றம்

யாழ்போதனா வைத்தியசாலையில நடத்தப்பட்டு வரும் சத்திரசிகிச்சை 'கிளினிக்' தினங்களில் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பதில் நிர்வாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

இதன்படி திங்கட்கிழமைகளில் டாக்டர் தயாளன் அம்பலவாணரும், செவ்வாய்க்கிழமைகளில் டாக்டர் என் ஜெயரட்ணமும் புதன்கிழமைகளில் டாக்டர் எம்.சிவகுமாரும், வியாழக்கிழமைகளில் டாக்டர் எஸ்.ரவிராஜும் நோயாளர்களைப் பார்வையிடவுள்ளனர்.

நோயாளிகள் இதனைக் கவனத்தில்கொண்டு உரிய தினங்களில் 'கிளினிக்'களுக்குச் சமுகமளிக்க வேண்டும் என்றும் -

எதிர்வரும் 28ஆம் திகதி 'கிளினிக்'திகதி வழங்கப்பட்டவர்களை எதிர்வரும் 25ஆம் திகதி கிளினிக்குக்கு வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10-139)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த
**சிவகுமார் கமலமோகன்**
அவர்கள் 2003 ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு மாகாண ரீதியில் இடம்பெற்ற மெய்வல்லுநர் போட்டியில் உயரம்பாய்தல் நிகழ்வில் புதிய சாதனை (1.94m) நிலைநாட்டியமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் அவரைப் பயிற்றுவித்த விளையாட்டு உத்தியோகத்தர் செ.ரமணன அவர்களையும் பாராட்டுகின்றோம்.

கணேசன் வி.க.
பன்னாலை, தெல்லிப்பழை.
(21521)(21-18-11)

## WANTED

| | | |
|---|---|---|
| Office Assistants | - | *(Male/Female)* |
| Sales Representatives | - | *(Male)* |
| Field Officers | - | *(Male)* |
| Bill Clerks | - | *(Male)* |

*Please Contact*
**M.C.B. PVT LTD.,**
159, Kannathiddy Road, Jaffna.
(21509) (21-11-18)

## ரஷ்யாவில் மருத்துவக் கல்வி

- 2003/2004 அனுமதி ஆண்டுக்கான மாணவர்கள் (ரஷ்யாவில் மருத்துவக்கல்வி) அனுமதிக்கப்படுகின்றார்கள்.
- ஆகக்குறைந்த அளவு தகைமைகளாக உயர்தரத்தில் (A/L) மூன்று பாடங்களிலும் திறமைச்சித்தி ('C' PASS) பெற்றிருத்தல்வேண்டும்.

**KURSK STATE MEDICAL UNIVERSITY**
2003/2004 இற்கான விண்ணப்பப் படிவங்கள்

- போதனை முற்றுமுழுதாக ஆங்கில பாடமொழியில்
- முதன்முதலில் ரஷ்யாவில் ஆங்கிலமொழியில் தொடங்கிய UNIVERSITY
- உயர்கல்விக் காலம் 6 வருடங்கள்
- மருத்துவப் பாடங்களுடன் சமகால நேரங்களில் ரஷ்யமொழியும் கற்பிக்கப்படும்
- 2003/2004 கல்வியாண்டு செப்ரெம்பரில் ஆரம்பமாகிறது.

மேலதிக விவரங்களுக்கு:
**KANTHAVELAN TRADERS,**
110, STANLY ROAD, JAFFNA.
☎ 077 6085465
021 222 2822
(21513) (26)

## பதவி வெற்றிடம் I-PM-P

### விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர் (SALES PROMOTION OFFICER)

அமெரிக்க FMC கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளான பீடை கொல்லிகளை விற்பனை செய்யும் துரித வளர்ச்சியடைந்து வரும் IPMP நிறுவனத்துக்கு கீழ்க்காணும் தகைமைகளையுடைய விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர் தேவை.

**தகைமைகள்:**

1. We are Looking For a Candidate below 25 years of age with a Pleasing Personality. (இன் முகமும் ஆளுமையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்)
2. G.C.E. A/L சித்தி பெற்றிருக்க வேண்டும்.
3. Dip. In Agric. from a Recognized Institution. (அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் விவசாய டிப்ளோமா பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.)
4. சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் ஓரளவு தேர்ச்சியுடையவராக இருத்தல் கவனிக்கப்படும்.
5. குறைந்தளவு மேற்பார்வையுடன் எதிர்பார்க்கும் வேலையைச் செய்யும் தகைமையுடையவராக இருத்தல் வேண்டும்.
6. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய தகைமையுடையவர்கள் எதிர்வரும் 23.08.2003ஆம் திகதிக்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

Chief Executive Officer
I.P.M.P. 2nd Floor IBM Building,
Navam Mawatha, Colombo 02.

FMC. Corporation USA

## விற்பனைக்கு

மோட்டரோலா
தொலைபேசி
இணைப்பு உடன்
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**021-222 5874**
(21506) (21-11-18)

## ஸ்ரார் கல்வி நிலையம்

சுன்னாகம்
**A/L 2004**
இந்துநாகரிகம்
P.சந்திரன் B.A.(Hons) H.C.
Paper Class
ஆரம்பம்: 18-08-2003
திங்கள் காலை 7.00 மணி.
(21511) (21-11-18)

## லொறிச் சாரதி தேவை

யாழ்.-கொழும்பு சேவைக்கு அனுபவம் வாய்ந்த லொறிச் சாரதியும் உதவியாளரும் (கிளினர்)தேவை. யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
பகலோன் களஞ்சியம்
334. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
(21468) (21-11-18)

## தேவை

புடைவை வியாபாரத்தில்
அனுபவம்வாய்ந்த
ஆண் தேவை.
உடன் நேரில் வரவும.
மிலேனியம் பஷன் &
பொம்பே பஸார
10,11, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(C/29517) (21-11-18)


## அவசர கலந்துரையாடல்

3ஆம் வருட தமிழ்த்துறை மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா தொடர்பான அவசர கலந்துரையாடல் நாளை (18.08.2003) திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் இடம் பெறவுள்ளது. அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

மாணவப்பிரதிநிதி, தமிழ்த்துறை.
(21498)(26-21-11-18)

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் கூறுவிலை

எமது சங்கத்தில் லேடன் லொறியில் பாவித்த உடற்கோப்பு பக்குவமாகக் கழற்றி வைக்கப்பட்டுள்ளது. வாங்கவிரும்புவோர் திருப்பி வழங்கப்படாத வைப்புப் பணம் ரூபா 50/-உம், திருப்பி வழங்கப்படும் வைப்புப் பணம் ரூபா 1000/-உம் சங்க காசாளரிடம் செலுத்தி விண்ணப்பப்பத்திரம் பெற்று 30.08.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.
(C/29527) (26-11-18-21)

## பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக விளையாட்டு விழா ஒத்திவைப்பு

ஓகஸ்ட் 16,17ஆம் திகதிகளில் நடைபெற இருந்த எமது கழகத்தின் 44ஆவது ஆண்டு நிறைவுவிழா விளையாட்டுப் போட்டி மழை காரணமாக 23ஆம், 24ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
பரு.ஐக்கிய வி. கழகம்.
(C/29564) (26-21-11-18)


## ஆஸ்திரேலியாவில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு

**இது ஓர் அரிய சந்தர்ப்பம!**

எமது நாட்டு ஆகாரங்களான -
இடியப்பம், பிட்டு, தோசை, அப்பம், சோறு, கறிவகைகள், இதர சிற்றுண்டி வகைகள் என்பனவற்றை தரமாகவும் சுவையாகவும் தயாரிக்கக்கூடிய அனுபவம்வாய்ந்த 37 முதல் 42 வயதுக்கிடையிலான குடும்பப் பொறுப்புக்கள் எதுவுமற்ற பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- சம்பளம் - இலங்கை நாணயத்தில் - மாதாந்தம் ஒரு லட்சத்து 60 ஆயிரத்துக்குக் குறையாமலும் வருடம் 20 லட்சத்துக்குக் குறையாமலும் தீர்மானிக்கப்படும்.
- வேலை வாய்ப்பு ஹோட்டலில் வழங்கப்படும்.
- பிரயாண ஒழுங்குகள் யாவும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் தமது தகைமையை நிரூபிக்கக் கூடிய விதத்தில் எதிர்வரும் 20,21,22ஆம் திகதிகளில் (புதன், வியாழன், வெள்ளி) மாலை 5.00 மணிமுதல் 6.30 மணிவரை கீழ்க்காணும் முகவரிக்கு சமுகமளிக்கவும்.

**இல.86, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**
☎ .222 3818
(போரூட் வாசஸ்தலத்துக்கு அருகில்)
(21510) (21-11-18

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



17-08-2003
றொபேட் றெஜி - மரியசதாநாயகி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் **கமிலஸ்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (17-08-2003) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். கமிலஸை அவரது அன்பு அப்பா, அம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, அம்மையா, அம்மம்மா, சக்கோட்டையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா ஆசைமாமா, அத்தை, மாமாமார், மாமிமார், அன்ரிமார், சித்தப்பாமார், சித்திமார் அண்ணாமார், தம்பி, மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

பழைய வேதக் கோயிலடி.
அல்வாய் வடக்கு. அல்வாய்.
ஆசை மாமா (செ.யோசேப்)
(21445)(21-11-17)

## UNIQUEALUMINIUM FABRICATORS (PVT) LTD

Specialists in Aluminium Framed
- Doors ◆ Windows ◆ Sky Lights ◆ Cellings ◆ Shop Fronts ◆ Partitions
- Curtain Walls ◆ Shower Cubicles
- Electronically Operated Sliding Doors
- Aluminium Composite Cladding

GUARANTEED AFTER SALES SERVICE

Phone: 68 3354, 69 3277, 67 4095 Fax: 69 3277
No. 449, Darley Road, Colombo - 10.
(21327) (24-11-19)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# குட்டையைக் குழப்பி குளிர்காய முயல்வோர்

"தமிழ் - முஸ்லிம் இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் அரசியல்வாதிகள் ஈடுபடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது."

- இவ்வாறு வலியுறுத்திக் கூறியிருக்கின்றார் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன்.

அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் காணி மற்றும் பிரச்சினைகளை ஆராய்வதற்கான மாவட்டக் குழுக் கூட்டத்தின் முடிவில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கின்றார்.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான உறவைச் சீர் செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை விவரித்த அவர், இந்தச் சமயத்தில் கடந்த கிலலங்களில் இடம்பெற்ற முஸ்லிம்களின் படுகொலைகள் பற்றிய விவரங்களை மெருகூட்டி கடுமையான முறையில் சிலர் பிரசாரம் செய்துவருவதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

பழைய நிலைமையை மீண்டும் கொண்டுவர இத்தகையோர் விரும்புகின்றார்களா என்றும் அவர் கேள்வி எழுப்புகின்றார்.

இவ்வாறு தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைத்து, கலவரங்களை ஏற்படுத்தி, அந்தக் குழப்பங்களில் குளிர்காயவும் அரசியல் லாபம் தேடவும் விரும்பும் சில முஸ்லிம் தலைவர்களின் போக்கு தோலுரித்துக் காட்டப்படவேண்டும்.

இதுவரை காலமும் பெரும்பான்மையைச் சிங்களவர்களும், சமவுரிமைக்காக விடுதலை வேள்வி நடத்தும் தமிழர்களும் தங்களுக்குள் மோதிக்கொண்ட சமயம், இடையில் நின்று அதிக லாபம் சம்பாதித்தவர்களால், இப்போது தமிழர்களும், சிங்களவர்களும் தங்களுக்குள் சமரசம் செய்துகொண்டு போவதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பது போல தமிழ் - சிங்கள முரண்பாட்டுக்கு இடையில்நின்று அகப்பட்டதைப் பிடுங்கிக் கொண்டவர்கள், தமிழ் - சிங்கள முரண்பாடு நீடிப்பதையும், குழப்பம் தொடர்வதையுமே விரும்புகின்றார்கள்.

அண்மைக்காலத்தில் முஸ்லிம் தலைவர்கள் சிலர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் இதனையே வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்வு காண்பதற்கு தமிழர்களும் அவர்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளும் இணங்கி வந்திருக்கும் இன்றைய நிலையில், அத்தகைய சமாதான முயற்சிகளில் தமிழர் தரப்பின் பேரம்பேசும் வலுவை பின்னடையச் செய்வதில் அரசுத் தரப்பும் அதிக ஆர்வம் காட்டுகின்றது.

அவ்வாறு தமிழர் தரப்பின் பேரம்பேசும் வலுவைக் குறைப்பதன் மூலம், தாம் விரும்பும் தீர்வு ஒன்றைத் தமிழர்கள்மீது திணிக்கமுடியும் என்றும் அரசுத் தரப்பு கனவு காண்கிறது.

அப்படி தமிழர் தரப்பின் பேரம்பேசும் வலுவைக் குறைக்கும் துரும்புச்சீட்டாக முஸ்லிம்களின் தரப்பை இவ்விடயத்துக்குள் நுழைக்கவும் அரசுத் தரப்பு முயல்கின்றது.

இதற்காக, இயல்பாகவே தற்போதைய சமாதான முயற்சிகளை எதிர்க்கின்ற - அதேசமயம் அரசுக்குச் சார்பாகச் செயற்படுகின்ற - சில முஸ்லிம் தலைவர்களை அரசியல் களத்தில் முன்னே நகர்த்தி, அவர்கள் மூலம் குழப்பத்துக்குத் தூபம் போடுகின்றது அரசு.

இது தமிழர்களின் தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகளுக்கு விளங்காமல் இல்லை.

வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்டவர்கள் தமிழ்பேசும் மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும். அந்த இரு தரப்பினருமே தங்கள் தாயகத்துக்கு சுயாட்சி முறை ஒன்றைச் சுவீகரித்துக்கொண்டு, அந்தச் சுயாட்சி முறையின்கீழ் அதிகாரப் பகிர்வோடும் புரிந்துணர்வோடும், பரஸ்பர நம்பிக்கை, விட்டுக்கொடுப்போடும் வாழ்வதுதான் சிறப்பு.

அதைவிடுத்து, இருதரப்பினதும் உரிமைகளைப் பறித்து வைத்துக்கொண்டு, அடிமைப்படுத்தி நிற்கின்ற பேரினவாதிகளுக்கு முண்டு கொடுப்பதும், அதன்மூலம் ஓரினம் தொடர்ந்து அடிமை வாழ்வில் அழுந்திக்கிடக்க துணை செய்வதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

அடிமைப்படுத்தலுக்கு எதிரான போராட்டத்தை, அந்த அடிமைப்படுத்தலுக்குத் துணைபோகும் சக்திகளுக்கு எதிராகவும் திருப்புவதற்கு, இத்தகைய ஏற்றுக்கொள்ள முடியாத - தவறான - போக்குகள் வழிசெய்யும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்துகொள்வது நல்லது.

அமைதி முயற்சிகள் - சமாதான நடவடிக்கைகள் ஆகியவை மூலம் கிடைக்கக் கூடிய தீர்வில் தங்களுக்கு அதிக பங்கு வேண்டும் என்று பலதரப்புகளும் கேட்கின்றன. நல்லது. அப்படி அதிகம் கேட்பதால் தீர்ப்பே கிட்டாமல் மீண்டும் குழப்பம் - சண்டை - வரலாம். அப்படி ஒரு நிலை வந்தால் முன்னர் அதிகம் கேட்டவர்கள் ஓடிஒளிந்துவிட முடியாது. அதிகம் கேட்பதன் விளைவை போரிலும் அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும்.

அதற்குத் தமிழர் தரப்பாகப் பேச்சுகளில் ஈடுபட்டிருக்கும் புலிகள் தயார்! ஆனால், உரிமைப் போர் நடத்தாமல் பங்கு கேட்போர் - அல்லது போர்க்களத்தில் எதிர்ப்புப் போர் நடத்திய அரசுக்கு முண்டு கொடுத்து, அதன் மூலம் கிடைத்ததை அனுபவித்தவர்கள் - தயாரா?

அவர்களே சிந்திப்பது நல்லது. குறிப்பாக அந்த மக்களின் தலைவர்கள் என்று தங்களைக் காட்டிக்கொண்டு இன்று வெற்றுவேட்டுச் சிற்றத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் தலைவர்கள் கவனத்தில் கொள்வது நல்லது.

## தென்மராட்சி தெற்கைச் சேர்ந்த
# காலபோக நெற்செய்கையாளருக்கு படையினரால் அடையாள அட்டை

சாவகச்சேரி,ஓக.17

தென்மராட்சி உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் படையினரால் விநியோகிக்கப்படும் விசேட அடையாள அட்டையினைப் பெற்றிருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் அடங்கியுள்ள சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை காலபோக நெற்செய்கையின் பொருட்டு விவசாயிகளிடம் கையளிப்பதெனப் படையினர் அண்மையில் அறிவித்திருந்தனர்.

இவ்வாறு படையினரால் பயிர்ச்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிக்குச் செல்லும் விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலியாள்களே படையினரால் விநியோகிக்கப்படும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் -

குறிப்பிட்ட அடையாள அட்டையை வைத்திருப்போர் மட்டுமே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படுவர் என்றும் - படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் - தென்மராட்சி தெற்குப் பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் கூலியாள்கள் அடையான அட்டைபெற வசதியாக 2x2 அளவுடைய இரு புகைப்படங்களில் தத்தமது கிராம அலுவலரிடம் கையொப்பம் பெற்று அவற்றை நாளை திங்கட்கிழமைக்கு முன்னர் கைதடி பெரும்பாக உத்தியோகத்தரிடம் கையளிக்கவேண்டும் என்று மறவன்புலோ விவசாய சம்மேளத் தலைவர் மா.லீலா விநோதன் அறிவித்துள்ளார். (எ-31)

# உணவுச்சாலைகளில் சுகாதாரம்; இறுக்கமாகப் பேணப்பட வேண்டும்
## மாநகர சுகாதார அதிகாரி அறிவிப்பு

அரியாலை,ஓக.17

யாழ். மாநகர சபையின் பிரதேசத்தில் அமைந்துள்ள உணவு உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் சுகாதார விதிமுறைகளை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டும் என்று யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மாரிகாலம் நெருங்கிக் கொண்டிருப்பதால் தொற்றுநோய்கள் பரவக்கூடிய சூழ்நிலை இருப்பதாகவும் -

உணவுச்சாலைகள், தாகசாந்தி நிலையங்கள், உணவு உற்பத்தி விநியோக நிலையங்கள், குளிர் உற்பத்திப் பொருள்கள் விநியோக நிலையங்கள் போன்றவை இனிவருங்காலங்களில் பின்வரும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் - சுகாதார வைத்திய அதிகாரி தாம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ உணவுச்சாலைகள், உணவு உற்பத்தி விநியோக நிலையங்கள், குளிர்களி (ஐஸ்கிறிம்) உற்பத்தி - விநியோக நிலையங்கள் சிறந்தமுறையில் துப்புரவாகவும், கிருமிகள் அணுகாத முறையிலும் பேணிப் பாதுகாக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

★ மேற்படி குறிப்பிட்ட சகல நிலையங்களிலும் உணவுப் பண்டங்களைத் தொற்று ஏற்படாதவாறு மூடி வைத்திருந்து விற்பனை செய்தல் வேண்டும்.

★ உணவு கையாளுபவரின் உடற்சுகாதாரம் செவ்வனே பேணப்படுதல் வேண்டும்.

★ உணவு விநியோகிப்பவர்கள் இயன்றவரை உபகரணங்களைப் பாவித்து உணவு பரிமாறுதல் வேண்டும்.

★ உணவு தயாரித்தல், விநியோகித்தல் என்பவற்றிக்கு பாவிக்கப்படும் உபகரணங்கள் நல்ல நிலையிலும் துப்புரவாகவும் வைக்கப்பட்டிருந்தல் வேண்டும்.

★ உணவு பரிமாறுபவர்கள் சுத்தமான உடை அணிந்திருத்தல் வேண்டும்.

★ உணவு தயாரிப்பதற்குப் பாவிக்கப்படும் பொருள்கள் தரமானதாகவும், அனுமதிக்கப்பட்ட பொருள்களாகவும் இருத்தல்வேண்டும்.

★ உணவுப் பொருள்கள், தயாரிக்கப்பட்ட பொருள்கள் சுகாதார விதி முறைப்படி களஞ்சியப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

★ சுகாதார விதிகளுக்கமைவான குப்பைத் தொட்டியினுள் கழிவுப் பொருள் போடப்பட்டு மூடியிருத்தலையும், மாநகர கழிவு அகற்றும் பகுதியினூடாத் தினமும் அப்புறப்படுத்தப்பட்டிருத்தலையும் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

★ உணவு தயாரிப்பவர்கள், விநியோகிப்பவர்கள் தமது கடமை நேரத்தில் வெற்றிலை பாவித்தல், புகை பிடித்தல் போன்றவற்றைத் தவிர்த்தலும், மலசலகூடம் பாவித்த பின்னரும் உணவைக் கையாள முன்னரும் சவர்க்காரம் இட்டுக் கைகழுவியிருத்தலும் அவசியம் என்று அதில் உள்ளது. (எ-9-ரி-17)

# பட்டியலில் கையொப்பமிடச் சென்றோர் அதிகாரிகளின் அசிரத்தையால் ஏமாற்றம்
## திருநெல்வேலிப் பகுதியில் நேற்று சம்பவம்

மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் ரூ.25 ஆயிரம் கொடுப்பனவுப் பட்டியலில் கையொப்பமிடச் சென்ற பயனாளிகள், யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி அதிகாரிகளின் நடவடிக்கை காரணமாக ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர். நேற்று திருநெல்வேலி காளிகோவிலடி சனசமூக நிலையத்துக்கு கையொப்பமிடச் சென்ற திருநெல்வேலிப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களே இவ்வாறு ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி பிரதேசத்தைச் சேர்ந்த ஜே/110, ஜே/111, ஜே/114 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்து கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியான பயனாளிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டது. இப்பட்டியல் கிராம அலுவலரினாலும், பிரதேச செயலாளரினாலும் மற்றும் கிராமிய புனர்வாழ்வுக் குழுவினாலும் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு கொடுப்பனவுக்கென சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

இப்பட்டியலில் கையொப்பமிடுவதற்காக திருநெல்வேலி பிரதேச பயனாளிகள் நேற்றையதினம் அழைக்கப்பட்டிருந்தனர். கையொப்பமிடுவதற்காக வருகைதந்த பயனாளிகளிடம் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரிகள், விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணைகளைத் தொடர்ந்து பயனாளிகளில் பலரை கையொப்பமிடவேண்டாம் என்றும் செயலக அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

அவ்வேளை, தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் அனைவருமே மீளக்குடியமர்ந்தோர் கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் எனவும் - அதற்கான காரணங்களையும் கிராமியப் புனர்வாழ்வுக் குழுவினர் யாழ். செயலக அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும், செயலக அதிகாரிகள் அதனை ஏற்றுக்கொள்ளாது அங்கிருந்து வெளியேறிவிட்டனர் எனக் கூறப்பட்டது. (எ-9)

# காக்கைதீவு கிராமத்துக்கு மின் இணைப்பு வேலைகள்
## இந்த வாரம் ஆரம்பம் என அறிவிப்பு

7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் காக்கைதீவு மாதிரிக் கிராமத்திற்கான மின்சார இணைப்பு வேலைகள் இந்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்தகவலை இலங்கை மின்சார சபையின் வடக்கு பிரதி பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டில் 'நான்' அமைப்பின் மூலம் ஒதுக்கப்பட்ட 3 லட்சம் ரூபாவும் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்ட 4லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுமாக தற்போது 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மின் இணைப்புக்கென வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே மூன்றாண்டுகளின் பின்னர் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.(எ-9-185)

### நாளை

ஆவணி 01
திங்கட்கிழமை
(18.08.2003)
திதி : ஷஷ்டி
பிற்பகல் 3.23 வரை
நட்சத்திரம: அச்சுவினி
பிற்பகல் 4.26 வரை
சுபநேரம் : 12.05 - 01.35
ராகுகாலம்: 7.35 - 09.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நாடு அறிவாளிகளால் அணி பெறுகிறது. சமயம் சான்றோரால் அழகு பெறுகிறது.

# மன்னார் சாந்திபுரம் பகுதியில் பாண்டியர் கால நாணயங்கள்
## மண்டை ஓடு ஒன்றும் மீட்பு

கிளிநொச்சி,ஓக.17

மன்னார் மாவட்டம் சவுத்பார் சாந்திபுரம் என்னும் பகுதியில் உள்ள மணல் மேடு ஒன்றில் மணல் அகழும்போது தொன்மை வாய்ந்த மனித மண்டையோடும் பாண்டியர் கால நாயணங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இப்பகுதியில் மக்கள் மணல் அகழும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்றும் இதன்போதே இவை கண்டுபிடிக்கப்பட்டன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக உடனடியாக பொலீஸாருக்கும், தொல்லியல் திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து இப்பகுதியில் பொலீஸார் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இது பற்றி ஆராய்வதற்கென தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று நேற்று சனிக்கிழமை அப்பகுதிக்குச் செல்லவிருந்தது எனவும் தகவல் ஒன்று தெரிவித்தது.

இப்பகுதியில் முன்னரும் பலதடவைகள் பாண்டியர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை - மன்னார் மாந்தைப் பகுதியில் 1950ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மண்டையோடு ஒன்று 3ஆயிரத்து 800 வருடங்கள் தொன்மை வாய்ந்ததென அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகம் அண்மையில் உறுதிசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## 60 ஆயிரம் ஆண்டுகளின் பின்னர்
# பூமிக்கு அண்மையில் 'செவ்வாய்' கிரகம்
## தொலைநோக்கியில் அவதானிக்கலாம்

கொழும்பு,ஓக.17

60 ஆயிரம் ஆண்டுகளின் பின்னர் செவ்வாய்க் கிரகம் பூமிக்கு அண்மையில் வர இருப்பதாக கொழும்பு பல்கலைக்கழக பௌதிகவியல் திணைக்கள சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் பி.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் புதன்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 3.52 மணிக்கு இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு இடம்பெறும்.

அன்றையதினத்தில் செவ்வாய்க் கிரகம் 55கோடி 70 லட்சம் கிலோமீற்றர் நெருக்கமான தூரத்தில் காணப்படும். அவ்வேளையில், சிறிய தொலைநோக்கி ஒன்றின்மூலம் இந்தக் கிரகத்தின் துருவ நிலைகளை அவதானிக்கமுடியும் என்றும் - டாக்டர் ஜயவர்த்தன தெரிவித்தார்.

செவ்வாய் கிரகத்தை அவதானிப்பதற்குப் பல முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணித வானியல் சங்கம், பல்கலைக்கழக வளவில் அவதானிப்பு முகாம் ஒன்றை 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் அமைக்கவுள்ளது. (எ-9-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கணங்கள்

## உயிராய் நேசித்ததால்.....

சூரியக்கதிர்கள் வெம்மை மடிக்கும் நேரம்
எப்போதாவது உனைக்காணுகையில்
இனம் தெரியாத பூரிப்பு, படபடப்பு
வாய் மட்டும் வரும் வார்த்தைகள் ஏனோ
வெளியில் வர மறுக்கின்றன.
நீ உறக்கத்தை தொலைத்த வேளையில்
எனக்கும் உறக்கமில்லை
உன் சிரிக்கின்ற கண்கள் நினைவுகளாய்
என் நெஞ்சத்துடன்
நீ அன்பு தந்த இரவு ஏழரைகளில்
எனக்கும் இன்பமில்லை
உன் பிரிவை தாங்காது
நாலும் இங்கே சுமைதாங்கியாய்
நான் செல்லும் பாதையெல்லாம்
உன் புன்னகை பூத்த
முகம் மட்டும் தேடுகிறேன்
என் பாதையோரப் பூக்களிடம்
உன் சேதியை வாசமாகக் கேட்கிறேன்
நீ பட்டம் பெற்று ஊர் திரும்பும் வேளை
கையசைத்து விடையளிக்கவும்
வார்த்தைகளால் வாழ்த்தியனுப்பவும்
எனக்குத் தென்பில்லை
உன்னை மட்டும் உயிராய் நேசித்ததால்....

-யாழினி.S

## பெண்ணே! நீ அடிமை இல்லை

நீ உறங்கியே இருப்பதற்கு
உள்ளத்தால் ஊனமுற்றவளா?
மங்கையே நீயும்
மானிடபிறவி தானே?
நெஞ்சம் கொண்டவளே!
உன் நினைவுகளை
ஏன் திணிக்கிறாய்....
கனவுகளை ஏன்
கருவினிலே கலைக்கிறாய்.....
உனக்கு இதயம் உண்டு
உனக்கும் உணர்வுகள் உண்டு
உயிர்த்தெழு பெண்ணே
உன் உன்னத வாழ்விற்காய்.



திபியா.ப

## உயிருலை

அணைந்த பாடின்றி
எரிந்துகொண்டே யிருக்கிறது
துணை நிற்பரென் றெண்ணியோரும்
அந்நியராய்.... மாறி,
ஆதிக்க வேட்டையிலே....
அடி வைத்துச் செல்கின்றார்.
மண்ணாய் போவார்; கண்ணற்றோர்
மரிக்க முன் உடலத்தை,
உலையிலேற்றி உருக்குலைத்தார்.
"விண்ணானம்" பேசியதற்கும்
மறுப்பறிக்கை.
கொன்றாலும் எமைத் தின்றாலும்...
மன்றாட்ட மென்பதினி மனத்தளவுமில்லை
வென்றாவோம்; விடுதலையை; விறல்
உயிரெரித்தும்... உலகறிய; உண்மை!

சு.க.சிந்துதாசன்
பொலிகையூர்.

## பயங்கரவாதி

பலருக்கு நீயொரு பயங்கரவாதி!
எனக்கும் அவ்வாறு இருந்திருக்கிறாய்,
வாக்குக் கொடுத்து விடுவாய்
திண்டாடுவது நானல்லவோ!
நீ... அவசரம் கொண்டவன்தான்.
எனக்கு நீ அவசியமானவன்.
நீ அளவோடு பேசிக்கொண்டால்
அளவற்ற மகிழ்வுகளும்
எனக்குச் சொந்தமாகலாம்.
அலைச்சல்களையும், உலைச்சல்களையும்.
எனக்கு நீ தந்திருக்கிறாய்.
நீ வார்த்தைகளைத் தடுமாறவிட்டால்
என் மீதுதான் குறை கூறுவார்கள்.
நீ சிலரை உயர வைத்திருக்கிறாய்
பலரைப் படுகுழியில் வீழ்த்தியிருக்கிறாய்.
பொய்களைச் சொல்லுதல்,
புழுகியடித்தல், திறமைகளும் உனக்குண்டு,
வார்த்தையால் அழிக்கின்ற
பயங்கரவாதி நீ.
மொத்தத்தில் வாழ்க்கையைத்
தீர்மானிக்கக் கூடியவன் நீதான்.

-கி.அ.தில்லைதாசன்

## செவ்வாய் தோஷம்

கண்ணாடியில் பட்டுத் தெறிக்கும்
அவள் விம்பத்தில் விரியும் பெண்மையில்....
இனிய கனவுகள் கண்டவள்.....
திருமணம் என்ற ஐந்தெழுத்துக்காய்
தினம் தினம் ஒத்திகை பார்த்தவள்....
அழகிய ஆயிரம் உறவுகளை
கற்பனையில் வடித்தெடுத்தவள்....
பெண்பார்க்கும் படலம் அரம்பமாகிய போது....
செவ்வாய் தோஷத்திற்குச் சொந்தக்காரியானாள்!
சாத்திரியார் வாக்குப் பேரிடியானது!
ஐயகோ... இவள் தோஷமுள்ள பெண்
இவளின் பாவம் கணவனைப் பறிக்கும்
ஊரே இப்படிப் பேசிக் கொண்டது!
யாரோ ஒருத்தியின் பாவத்துக்கு.....
தம்முயிரைப் பலியாக்குவதா என
தேடிவந்த மாப்பிள்ளைகள் எல்லாம்
திசை தெரியாது ஓடிமறைந்தனர்.
செவ்வாய்க்கிரகமே வாழ்விடமாகையில் -இங்கு
செவ்வாய்தோஷமுள்ளவள் பாவத்தின் சின்னமானாள்!
வண்ணத்துப் பூச்சியாய் வட்டமிட்ட அவள்
கூண்டுப் புழுவாய் தனக்கே வலையமைத்தாள்!
சாத்திரம், சம்பிரதாயம் என்ற இருளிலிருந்து
ஒளியைத் தேட முயலும் சமூகமே...!
நாற்பது வயது நரைவிழுந்த....
முதிர்கன்னி அவளுடன் இன்று....
எஞ்சியிருப்பதற்கு செவ்வாய் தோஷத்தை மட்டுமே
உங்களால் பரிசளிக்க முடிந்தது.!

சி-சிவகௌரி
மட்டுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனமுற்றோருக்கு கல்விபுகட்ட கல்வியியற் கல்லூரியில் விசேடகற்கை

## பீடாதிபதி கமலநாதன் தெரிவிப்பு

வலி.தெற்கு,ஓக.17

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அடுத்த வருடத்தில் இருந்து "விசேடகல்வி" என்னும் புதிய பாடநெறி அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய கல்வி நிறுவகத்தில் விசேட கல்வி தொடர்பான கல்வி மாணி, முதுகல்விமாணி பாடநெறிகளும், தேசியகல்வியியற் கல்லூரிகளில் சிங்களமொழிமூலம் இப்பாடநெறிகளும் பல வருடங்களாக நடைபெற்று வருகின்றன.

தமிழ் மொழியில் இப்பாடநெறி எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படாதிருந்தமையைச் சுட்டிக்காட்டியதை அடுத்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இப்பாடநெறியை அடுத்தவருடம் முதல் நடத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

விசேட தேவையுள்ள மாணவர்களைக் கற்பிப்பதற்கேற்ற வகையில் இப்பாடநெறி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

விசேட தேவையுள்ள பிள்ளைகளாக கண்பார்வையற்றோர், காது கேளாதோர், வாய்பேசமுடியாதவர்கள், உளவளர்ச்சிப் பின்னடைவு உடையவர்கள், புலன் தொடர்பாடல் குறைபாடுடையவர்கள், வலதுகுறைந்தவர்கள் போன்றோருக்கு கற்பிப்பதற்கு சிறப்பார்ந்த ஆசிரியப் பயிற்சியை வழங்கும் பாடநெறிதான் விசேட கல்வி எனப்படுகின்றது.

ஏனைய ஆசிரிய பயிற்சி பாடநெறிகளைப் போன்றதே இதுவும். இரண்டு வருடம் கல்லூரியில் தங்கி இருந்து படித்து, மூன்றாம் வருடம் உள்ளக பயிற்சியை நிறைவுசெய்ய வேண்டும். உள்ளகப் பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுவதோடு, குறிப்பிட்ட விசேட தேவையுடைய மாணவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவர்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி போன்ற பாடசாலைகளிலும் வேறும் பல பாடசாலைகளிலும் இவ்வகையான விசேட கல்வி பெறும் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர் - என்று அவர் தெரிவித்தார். (எ-152)

## காசநோய் பற்றிய கருத்தரங்கு

குருநகர்,ஓக.17

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காசநோய் தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு இக்கருத்தரங்கு நடைபெறும்.(எ-51)

# உதவிப் பொருள்களுக்கு பணம் அறவிடப்படுகிறதாம்

## மட்டுவில் விவசாயிகள் தெரிவிப்பு

தென்மராட்சி,ஓக.17

மட்டுவில் சந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவில் மக்கள் மீளக் குடியமர்ந்த வேளையில் லங்கா சேவா நிறுவனத்தினரால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாய உபகரணங்கள் மற்றும் விவசாய உள்ளீடுகளுக்கான குறிப்பிட்ட ஒரு தொகையை மீளச் செலுத்துமாறு அப்பகுதியில் இயங்கிவரும் விவசாயம் தொடர்பான அமைப்பு வற்புறுத்தி வருவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இப்பொருள்களை முன்னர் வழங்கும்போது விவசாயிகளிடம் படிவம் ஒன்றில் கையொப்பம் பெறப்பட்டதாகவும் -

அப்படிவத்தினைத் தற்போது காட்டி ஒவ்வொருவரும் தலா 2 ஆயிரத்து 100 ரூபா செலுத்துமாறு வற்புறுத்துவதாகவும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தொகையைச் செலுத்தத் தவறினால் எதிர்காலத்தில் இவ்வாறான உதவிகள் வழங்கப்படமாட்டாது என்று சம்பந்தப்பட்டவர்கள் அச்சுறுத்துவதாகவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

# யாழ். தபாலக ஒழுங்கை ஒருவழிப் பாதையானது

கொழும்புத்துறை,ஓக.17

யாழ். பஸ் நிலையத்துக்கு ஸ்ரான்லி வீதியிலிருந்து செல்லும் தபாலக ஒழுங்கை ஒரு வழிப்பாதையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி ஸ்ரான்லி வீதியில் இருந்து பஸ் நிலையம் நோக்கி வாகனங்கள் செல்லமுடியும். ஆனால் பஸ் நிலையத்திலிருந்து ஸ்ரான்லி வீதிக்கு வாகனங்கள் செல்ல அனுமதி கிடையாது.

யாழ். கஸ்தூரியார் வீதி நகரிருந்து வெளிச் செல்லவும் காங்கேசன்துறை வீதி நகருக்குள் நுழையவும் ஒரு வழிப் பாதையாகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மேற்படி நடைமுறைகளை பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு வாகன சாரதிகளுக்கும் பொதுமக்களுக்கும் போக்குவரத்துப் பொலீஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன், நகரின் பிரதான வீதிகளின் ஓரங்களில் வாகனங்களை நிறுத்தி வைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் -

மேற்படி விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் - பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-30)

# மானிப்பாய், சுதுமலை பகுதிகளில் 'டெங்கு' ஒழிப்பு பிரசாரம் தீவிரம்

வலிகாமம்தெற்கு,ஓக.17

டெங்குக் காய்ச்சல் பரவாமல் இருப்பதற்குத் தேவையான முன்நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் -

பொதுமக்கள் இது குறித்து விழிப்புடன் இருக்கவேண்டும் எனவும் - சுகாதாரப் பகுதியினரால் ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

அண்மையில் பெய்த மழை காரணமாக டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - மானிப்பாய், சுதுமலை, தாவடி போன்ற இடங்களில் சிலர் டெங்குக் காய்ச்சலால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது என்றும் -

இதனையடுத்தே, சுகாதாரப் பகுதியினர் இவ்வாறு ஒலிபெருக்கி மூலம் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் - அப்பகுதிக்கான சுகாதார அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் போன்றோர் வீடுகளுக்குச் சென்று அண்மையில் பெய்த மழை காரணமாக மழைநீர் தேங்கியுள்ள தகரங்கள், பேணிகள், போத்தல்கள் என்பனவற்றில் காணப்படும் நுளம்புகளை அழிக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

வீடுகளிலும், அதன் சுற்றாடல்களிலும் கழிவுநீர் பெருகவிடாமல் தடுத்து, நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துமாறும், டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்லுமாறும் - சுகாதார பகுதியினர் தமது விழிப்புணர்வு பிரசாரத்தில் வலியுறுத்தி வருகின்றனர். (எ-152)

## செயலமர்வு

வலி.வடக்கு,ஓக.17

தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சேவைக்கால ஆசிரியர்களுக்கான தமிழ் மொழிக்கான வினாத்தாள் தயாரித்தல் செயலமர்வு நாளை திங்கட்கிழமை காலை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த செயலமர்வில் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளும்படி தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ-86)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.17

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்பத்தில் சுப்புலட்சுமி சச்சிதானந்தத்தின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - ரி.திவாகரன், மிருதங்கம் - வை.வேணிலன், கெஞ்சிரா - கே.அனந்தகோபன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ-10)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபையினரால் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு 'தாயுமானவன்' பற்றி சி.வை.நித்தியானந்தசர்மா இசைச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (எ-10)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு 'ஐந்து முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்' என்னும் பொருளில் கலாநிதி [illegible] (எ-10-30)

# நல்லூர் ஆலய உற்சவத்தில் புலிகளின் குரல் கலையரங்கம்

யாழ்ப்பாணம்,ஓக.17

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு 'புலிகளின் குரல்' நிறுவனம் நடத்தும் கலை நிகழ்வுகள், எதிர்வரும் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் மாலை 6 மணிக்கு நல்லூர் ஆலயப் பகுதியில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு பண்டாரவன்னியன் நாட்டுக் கூத்தும், மாவீரர் நடனமும், 27ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு இசை நிகழ்ச்சியும், 28ஆம் திகதி மாலை 6 மணிக்கு கவியரங்கம் மற்றும் நடனம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இந்நிகழ்ச்சிகளில் பிரபல தமிழீழ இசைக்கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர். (ம-8-ரி)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

பதினைந்தாம் திருவிழா



## அருள்தனை வேண்டி நிற்கின்றோம்!

அரகர என்றே அடியார்கள்
அருள்தனை வேண்டி நின்றார்கள்
கரமுறை வேலைக் கண்டார்கள்
கந்தா! கந்தா! என்றார்கள்
வரமது நல்கும் வடிவழகு
வள்ளி குஞ்சரி அதில் இணைவு
மரபிசை அர்ச்சனை தனைக் கேட்டே
மயூரன் நல்லூரான் சிலிர்த்தான்!

தேவி.கணேஸ்

## நிம்மதி தந்திடையா!

நல்லையம்பதி தனிலே
நயமுடனே வீற்றிருக்கும்
நல்லைக் குமரா - உனை
நம்பி வருவோர்க் கெல்லாம்
நண்பனாய் நீயிருந்து
நல்லருள் காட்டிடையா!
நின்பாதம் தொழ வேண்டி
நிதமும் உனைத் தேடி வரும்
நினது அடியார்களுக்கு
நிறையருள் தந்திடையா!
நிம்மதி யற்ற இந் நாட்டிலே
நிரந்தர சமாதானம் நிலைத்திட
நிதமும் உனை வணங்குகிறோம்
நீங்காமல் எமைக் காத்திடையா!

க.புஸ்பாஞ்சலி - புங்குடுதீவு - 4

## அருள் தருவாய் ஆனந்த மயிலோனே!

நாடித் தேடி வந்த பக்த அடியார்களுக்கு
ஒருமுகன் திருமுருகன் ஆறு முகனாய்
பன்னிரு கண்களால் ஞான ஒளி தருபவனே
ஓடி வந்த அடியேனுக்கும் ஒருவரம் தா முருகா!

பக்த வெள்ளத்தில் மிதப்பவனே
நாத வெள்ளத்தில் சுளி ஓடுபவனே
கள்ள மில்லா உள்ளத்தில் குடிபுகுபவனே
என் துயரத்தில் பங்கு கொள்ள ஓடிவா முருகா!

எண்களில் ஒருவனாய் பன் (ண்)களில் ஒருவனாக
உமையவளின் முத்தம் கேட்டவனே
ஆறுமுகனாய் நல்லையம்பதியில் குடிகொண்டவனே
இரு மணவாட்டியுடன் காட்சியருள் தருவாய் முருகா!

அ.வே.கு.சிவசேதுகாவலர் - சங்கரத்தை.

## நயந் தருள் புரிவாய்

நல்லூர்க் கந்தன் அடி
நாள் தோறும் பணிந்திட்டால்
எல்லையில் லாக் கருணை
என்றுமே ஈய்ந்திடுவான்!

தேடிடும் சமாதானம்
நாடியே வந்திட
வாடிய மக்கள்
மனங்கள் நிறைந்திட
ஓடியே வந்திடுவாய்

ஓ...நல்லைக் கந்தா!
நாடியே வேண்டுகின்றேன்
நயந் தருள் புரிவாய்!

அ.தில்லைநாயகி - பொலிகண்டி

## கருணை செய்வாய்! நல்லைக் கந்தா!

கருணை செய்குவாய் நல்லைக் கந்தா - நீ
அழகு மயில் ஏறி ஞான ஒளி வீசிட (கருணை செய்குவாய்...)
அருளோங்கும் நல்லூர்க் கந்தா - வடிவேலா
இறையருள் தந்து எமையும் காப்பாய் (கருணை செய்குவாய்...)
தீரா நோய்களும் தீர்ந்து மறைந்திட
தினமும் தொழுதே சரணம் புகுந்தேன்.
ஓங்கார வடிவேலவா - பரமன் மைந்தா
மக்கள் குறை தீர்த்திடும். அருள் வேலவா (கருணை செய்குவாய்...)
இன்ப துன்பத்தில் இறை அருள் செய்துவே
எல்லா உயிரையும் காப்பவன் நீயே...
சரவணப் பொய்கையில் உதித்தவனே
சரவண பவ னெனும் நாமம் கொண்டவனே (கருணை செய்குவாய்...)

சி.சிவதர்மனா - யாழ். இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(28666)


# இலவச மருத்துவ சேவையும் நற்செய்திக் கூட்டங்களும்

கடந்த ஜனவரி மாதம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இலவச மருத்துவ சேவை வழங்கிய தென்கொரிய மருத்துவ நிபுணர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருகிறார்கள். ஓகஸ்ட் மாதம் 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் குருநகர் புதிய பூங்கா வீதியிலுள்ள **"இம்மானுவேல் சுவிசேஷ சபை"** மண்டபத்தில் இலவச மருத்துவ சேவையும் நற்செய்திக் கூட்டங்களும் நடைபெறும்.

*காலம்:*

19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
மாலை 4.00 மணி முதல் 7 மணி வரை

20ஆம் திகதி புதன்கிழமை
காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
பிற்பகல் 2.00 மணி முதல் 7.00 மணி வரை

21ஆம் திகதி வியாழக்கிழமை
காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
பிற்பகல் 2.00 மணி முதல் 7.00 மணி வரை

*இடம்:*

**இம்மானுவேல் சுவிசேஷ சபை**
**புதிய பூங்கா வீதி, குருநகர்**
**யாழ்ப்பாணம்.**

மதபேதமின்றி அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

(21420) (21-18-19)


# விற்பனையாகிறது

**இந்துமதப் பொது அறிவு**

**A.S.A. தரங்கன்**

க.பொ.த.சாதாரணதர உயர்தர மாணவர்களுக்கு உகந்தது.


சைவ சமய அறிவுப் போட்டிகளில் திறமைச் சித்தி பெறக்கூடியதும் இந்துமதத்தின் ஆறு பிரிவுகளையும் உள்ளடக்கிய வினாவிடை

**அருணா பப்ளிகேஷன்**

*நாட்டின் சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.*

(29508)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



விஸ்வமடுவைச் சேர்ந்த

**S.M.கபிரியேல**

(உற்பத்தி முகாமையாளர், மாந்தை சோல்ட் லிமிட்டெட்)

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்
மாந்தை சோல்ட் லிமிட்டெட்

(21459)(21-18-19)


காலம் காலமாக
இளம் சருமம் பெற
கிரீம், லோஷன்
உபயோகியுங்கள், இல்லையேல்
மெடிமிக்ஸில் குளியுங்கள்.




காலங்காலமாய் சருமத்தை இளமையாக, பொலிவாக, ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கான இரகசியம் ஆயுர்வேதத்திலுள்ளது. இதே ஃபார்முலா மெடிமிக்ஸ் ஆயுர்வேதிக் சோப்பில் உள்ளது. இது 18 சக்திவாய்ந்த மூலிகைகள் மற்றும் தேங்காய் எண்ணெயின் நற்குணங்கள் நிறைந்த, கைகளால் தயாரிக்கப்பட்ட ஒப்பற்ற கலவையாகும். மெடிமிக்ஸில் குளியுங்கள், உங்கள் சருமம், முகப்பரு, மாசு, வெயில், சோர்வு போன்றவையை எதிர்க்கும், அதோடு காலம் காலமாய் நீடித்த பொலிவைத் தரும்.

மெடிமிக்ஸ் ஆயுர்வேதிக் சோப்
சருமத்தை இளமையாக
வைத்திருக்கும் என்றென்றும்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டை சிதைக்கும் ஆடைகளுடன் ஆலயத்துக்கு வருவதைத் தவிருங்கள்

## தங்கம்மா அப்பாக்குட்டி கோரிக்கை

தெல்லிப்பழை,ஓக.17

சைவத்தமிழ்ப் பண்பாட்டைச் சிதைக்கும் ஆடைகளுடன் துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு வருவதைத் தவிருங்கள்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய பரிபாலன சபைத் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி.

மேற்படி ஆலய உற்சவம் தொடர்பான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே சிவத்தமிழ்ச் செல்வி இவ்வாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இது சைவ மக்களின் கலாசாரத் திருவிழா. இந்த விழாவிலே நாம் எமது கலாசாரத்தைப் பேண வேண்டியது அவசியம். இம்முறை உலகெங்கிலும் வாழும் தமிழர்களெல்லாம் இந்த மஹோற்சவத்திற்கு வரவிருக்கிறார்கள். தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் எம் கலாசாரத்தைப் பேண வேண்டியது அவசியமாகும். எனவே, எம் சைவ தமிழ்மக்கள் எமது கலாசாரத்திற்கு இசைவான ஆடைகளை அணிந்து ஆலயத்திற்கு வாருங்கள்.

பெண்கள், குழந்தைகள் ஆலயத்துக்கு ஆபரணங்களை அணிந்து வருவதைப் பெருமளவில் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

ஆலய தேர், தீர்த்த உற்சவங்களின் நேரடி வர்ணனைகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சர்வதேச ரீதியில் ஒலிபரப்பவுள்ளதனால் உலகெங்கும் வாழும் தமிழர்கள் இதனைக் கேட்டு ஆத்ம திருப்தி அடையலாம் - இப்படி அவர் கூறினார். (ம-150)



சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய அங்கத்தவர் பதவியேற்பு அண்மையில் மருதனார்மடம் விவசாயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது மாவட்ட இணைப்பாளர் லயன் டாக்டர் வி.தியாகராசா புதிய தலைவரான லயன் கே.திருநாவுக்கரசுவிடம் நியமனக் கடிதத்தைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ)

## 1953 ஹர்த்தால் நினைவு தினம் இன்று குடாநாட்டில்

யாழ்ப்பாணம்,ஓக.17

யாழ்ப்பாணம் சமூக வாழ்வு மன்றம் ஏற்பாடு செய்துள்ள 1953 இல் அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நாடெங்கும் மக்கள் கிளர்ந்தெழுந்த ஹர்த்தாலின் 50 ஆவது வருட நினைவு தினம் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு இ.தவராசா தலைமையில் நடைபெறும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் எஸ்.ஆர்.எட்வேட், இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த சா.தியாகலிங்கம், ஓய்வு பெற்ற தபாலதிபர் எஸ்.இராசையா, சி.எம்.யூலைச் சேர்ந்த எஸ்.சேகர், இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கத்தைச் சேர்ந்த சொ.சிவபாலன், கூட்டுறவு ஊழியர்கள் சங்கத்தைச் சேர்ந்த எஸ்.கனகரத்தினம், ஏ.சி.ஜோர்ஜ் ஆகியோர் உரையாற்றுவார்கள். (ம-173)

# ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சபையில் பாராட்டு

## தாய்லாந்து பிரதமர் முன்னிலையில்

கடந்த இரண்டு தசாப்த காலமாக நாம் தவறான வழியில் மேற்கொண்ட பயணத்தாலேயே இலங்கை இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது. நாட்டை மீளக்கட்டி எழுப்பவும், இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை.

- இப்படி தாய்லாந்து பிரதமரின் முன்னிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் புகழாரம் சூட்டினார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

தாய்லாந்துப் பிரதமர் தக்சின் சின் வத்ராவின் இலங்கை விஜயத்தைக் கௌரவிக்கும் வகையில் நாடாளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் விசேடமாகக் கூட்டப்பட்டது.

இவ்விசேட அமர்வில் ஆளும் கட்சியினதும், எதிர்க்கட்சியினதும் உறுப்பினர்கள் 95 வீதமானோர் வருகை தந்திருந்தனர்.

வழமையாகவே எந்த ஒரு கூட்டத் தொடரையும் தவறவிடாத ஜே.வி.பி. உறுப்பினர்கள் 15 பேரில் ஆக நான்கு பேர் மட்டுமே நேற்றுமுன்தினம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் காலை பத்து மணிக்கு படைக்கல சேவிதர் பிரதானவாயில் வழியாக செங்கோல் ஏந்திவர, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவும், தாய்லாந்து பிரதமர் தக்சின் சின்வத்ராவும் சபாமண்டபத்திற்கு வருகைதந்தனர்.

ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களும், அமைச்சர்களும் எழுந்து நின்று தாய்லாந்து பிரதமரை வரவேற்றனர். அதேவேளை, பார்வையாளர் கலரியிலும், சபாநாயகர் கலரியிலும் அமர்ந்திருந்த வெளிநாட்டுத் தூதுவர்களும் விசேட விருந்தினர்களும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

சபாநாயகர் வழமைபோல் தனது ஆசனத்தில் அமர, தாய்லாந்து பிரதமர் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

தாய்லாந்து பிரதமரின் வருகையை உத்தியோகபூர்வமாக அறிவித்த சபாநாயகர், தாய்லாந்து பிரதமரை அறிமுகம் செய்ததோடு, வரவேற்புரையை நிகழ்த்தினார்.

சபாநாயகர் அங்கு பேசுகையில்:-

ஒரு பிரபல வழக்கறிஞராகவும், பின்னர் பொலீஸ் பாதுகாப்புத்துறையிலும் அனுபவமுடைய தாய்லாந்து பிரதமர் வெளிவிவகார அமைச்சராகவும், பிரதிப் பிரதமராகவும் கடமையாற்றியவர்.

1998ஆம் ஆண்டு தாய்லாந்து ரேங் கட்சியை உருவாக்கி, மூன்று




வருடங்களில் நாட்டின் தலைமைப் பதவியை மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் பெற்று சாதனை படைத்தவர் அவர்.

இலங்கை - இந்திய நல்லுறவுக்குப் பாலம் அமைத்ததுடன் பௌத்த மத வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்கியவர் என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து விசேட உரையாற்றிய தாய்லாந்து பிரதமர்-

ஐரோப்பிய நாடுகளின் வளர்ச்சிக்கு உறுதியான அமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால், ஆசிய நாடுகளுக்கு அப்படியான அமைப்புக்கள் ஒன்றும் இல்லை. எனவே, உறுதியான அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முன்னெடுப்புக்களை பெரிதும் பாராட்டிய தாய்லாந்து பிரதமர், இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட தனது அரசும் மக்களும் எப்பொழுதும் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தாய்லாந்து பிரதமருக்கு அரசின் சார்பில் சபைமுதல்வரும் நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சருமான டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டாரவும், எதிர்க்கட்சிகளின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் நன்றி தெரிவித்துப் பேசினார்கள்.

வீழ்ந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் சாதனை படைத்தவர் தாய்லாந்து பிரதமர். எமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதி அமரர் ஆர்.பிரேமதாஸவினால் உருவாக்கப்பட்ட ஜனசவிய உதவித்திட்டம் போன்று தாய்லாந்திலும் உருவாக்கி மக்கள் மனதில் அழியாத இடத்தை அவர் பிடித்துவிட்டார்.

அதேவேளை - விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சு நடைபெறுவதற்கு இடமளித்ததோடு, சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து இலங்கை மக்களின் இதயங்களிலும் அவர் இடம்பிடித்துவிட்டார். இதனால், தாய்லாந்து பிரதமர் தக்சின் சின்வத்ரா சமாதானத் தேசத்தின் தலைவரானார்.

- இப்படி அமைச்சர் லொக்கு பண்டார குறிப்பிட்டார்.

பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுவரும் சமாதான முன்னெடுப்புகளை எதிர்க்கட்சித் தலைவர் பெரிதும் பாராட்டிப் புகழாரம் சூட்டினார்.

இலங்கை, பல்லின மக்களும் பல மதங்களைச் சார்ந்தவர்களும் ஒன்றாக ஒரே குடும்பம் போல் வாழ்ந்த நாடு. தென் இந்தியாவில் இருந்து எமக்குக் கிடைத்த அரும்பெரும் சொத்து பௌத்தமதம். பௌத்தமதத்தின் வளர்ச்சிக்கு தாய்லாந்து பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது.

தேரவாத பௌத்தத்தைக் கடைப்பிடிக்கும் இந்நாட்டில், கடந்த இரண்டு தசாப்தங்களாகத் தவறான வழியில் திசை திருப்பப்பட்டுவிட்டோம். இதனால் குழப்பமும், குரோதமும் ஏற்பட்டன. இப்படியான நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பலனளித்துள்ளன.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதன்பின் நாடாளுமன்ற அமர்வுகள் ஓகஸ்ட் 19ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டன.

தாய்லாந்து பிரதமர், சபாநாயகருடன் சபையில் இருந்து வெளியேறியபோது, எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்திற்கு அருகில் சென்று கைலாகு கொடுத்து விடைபெற்றார்.

# வாசகர் திருமுகம்

## தொலைபேசி இணைப்புப்பெற 'லூப்' வசதி எப்போது வரும்?

நான் அடிமட்ட அரசசேவை ஒன்றில் பணிபுரிகின்றேன். எமது வீட்டிற்கு தொலைபேசி இணைப்புப்பெறும் நோக்கில் 1999 பிற்பகுதியில் எனது உறவினர் ஒருவர் மூலமாக ஸ்ரீலங்கா ரெலிகொம் யாழ். அலுவலகத்தில் விண்ணப்பம் செய்தோம். அதன்பின் சென்று விசாரித்தபோதெல்லாம் "லூப்" இல்லை என்ற பதிலே தரப்பட்டது. இப்படி இருக்கையில், 2002 ஆவணி மாத உதயனில் 1999 வரையான விண்ணப்பங்களுக்கு உடன் இணைப்புகள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு நிர்வாகத்திற்கு பொறுப்பானவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வறிவித்தலை நம்பி ரெலிகொம் சென்று விண்ணப்பதாரி கொழும்பு செல்லவேண்டியிருந்ததனால் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து விண்ணப்பதாரியின் தாயார் பெயருக்கு விண்ணப்ப மாற்றஞ்செய்து, 2002 நடுப்பகுதியில் எமது வீட்டைப் பார்வையிட்டு மதிப்பீடுசெய்து உடன் தொலைபேசி இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு, நிர்வாகத்திற்கு அப்போது பொறுப்பாக இருந்தவரால் பணிப்புரை விடுக்கப்பட்டது. ஆனால், இற்றைவரை அப்பணிப்புரை நிறைவேற்றப்படவில்லை. மாறாக ஆனைக்கோட்டைப் பகுதிக்கு 'லூப்' இல்லை என்ற பதிலே தரப்பட்டது.

ஆனால், யாழ். நகரை அண்டிய பகுதிகளில் 2002 ஆம் ஆண்டு வரையான விண்ணப்பங்களுக்கே இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. அது மாத்திரமல்ல, 'லூப்' இல்லை என்று வர்ணிக்கப்பட்ட எமது பகுதியிலேயே 2001ஆம் ஆண்டு விண்ணப்பங்கள் இரண்டிற்கு இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. இதுபற்றி திருகோணமலைக்கு முறையிட்டபோது 'லூப் இல்லை' என்ற பதிலே கிடைத்தது. பெருமனதுடன் யாழ். நிர்வாகத்தினரும் அதே பதிலை எமக்கு அனுப்பிவைத்தனர். என்ன ஆச்சரியம்! "லூப்" இல்லாத மானிப்பாய் வீதியிலிருந்து (எமது வீட்டிலிருந்து சுமார் 200 மீற்றர் தூரம்) ஒரே நாளில் பல இணைப்புக்கள் வழங்கப்பட்டுவிட்டன.

எமது ஆனைக்கோட்டை, கொக்குவில் பகுதிகளுக்கு நிறைய தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவேண்டும். அது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், நீதி சாகடிக்கப்படக் கூடாது.

இறுதியாகக் கீழ்வரும் வினாக்களுக்கு ரெலிகொம் நிர்வாகத்தினர் பதிலளிப்பார்களா?

i. வடக்கு - கிழக்கு நிர்வாகத்திற்கு பொறுப்பானவர் குறித்த இடங்களுக்கு 'லூப்' வசதி இல்லை என்பது தெரியாமலா 1999ஆம் ஆண்டு வரையான விண்ணப்பங்களுக்கு இணைப்பு வழங்குவதாக அறிவித்தார்?

ii. 1999 வரையான விண்ணப்பங்கள் இருக்க 2002 வரையான விண்ணப்பங்களுக்கு (யாழ். நகர்ப் பகுதி) 'லூப்' பொருத்தி இணைப்பு வழங்குவதுதான் ரெலிகொம் நீதியா?

iii. ஆனைக்கோட்டை பகுதிக்கு 'லூப்' இல்லை என்பது தெரியாமலா எமது வீட்டிற்கு இணைப்பு வழங்குமாறு (2002 செப்ரெம்பரில்) பிரதேச முகாமையாளர் பணிப்புரை விடுத்தார்?

'லூப்' இல்லை என வர்ணிக்கப்பட்ட இடங்களுக்கு அதிரடியாக இணைப்பு வழங்க யாழ். ரெலிகொமினால் புதிய கருவி ஏதாவது கண்டு பிடிக்கப்பட்டதா?

1999 வரையான விண்ணப்பதாரிகளில் சார்பில்

**மா.ப.ரஞ்சன்.**

## மரங்களை அழிவிலிருந்து காப்பாற்ற உரிய நடவடிக்கை எடுப்பது யார்?

நாட்டில் கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான மரங்கள் அழிவடைந்துள்ளன. இதனால், அறை வெப்பநிலை அதிகரிப்பு, மழைவீழ்ச்சி குறைவு போன்ற சூழலியற் பாதிப்புக்கள் குடாநாட்டில் ஏற்பட்டுள்ளன.

காலத்திற்குக் காலம் அரச திணைக்களங்களாலும் பொது அமைப்புகளாலும் மரநாட்டு விழாக்கள் கொண்டாடப்பட்டு வெறும் சடங்கு சம்பிரதாயமாக மரங்கள் நடப்பட்டாலும் பின்பு அவை உரிய கவனிப்பின்றி அழிந்துள்ளன.

இந்நிலையில், வீதியோரங்களில் காணப்படும் மரங்களில் சில வியாபாரக் கம்பனிகள் தமது விளம்பரங்களை ஆணிமூலம் பொறித்து வருகின்றன. தீவுப்பகுதி, வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி, யாழ்ப்பாணப் பகுதியில் வீதியோரங்களில் உள்ள அநேகமான மரங்கள் இவ்வாறான விளம்பரங்களைத் தாங்கி நிற்பதை சமீபகாலமாக அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு ஆணிமூலம் விளம்பரங்களை மரங்களில் பொறிப்பதனால் தாவரத்திற்கு வேரில் இருந்து உணவு, நீர் கடத்தப்படுவது பாதிக்கப்பட்டு மரத்தின் வளர்ச்சி பாதிப்படையவோ அல்லது பட்டுப்போகவோ சந்தர்ப்பமுள்ளதாக தாவரவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள். தமது வியாபாரத்தை மட்டும் நோக்காகக் கொண்டு சமூகப்பொறுப்புணர்வு இன்றிச் செயற்படும் வியாபாரக் கம்பனிகளுக்கு எதிராக அவ்வவ்பகுதி மாநகரசபை, நகரசபை என்பனவும் வனபரிபாலனத் திணைக்களமும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் எதிர்காலத்தில் மரங்களில் விளம்பரங்களைப் பொறிப்பதைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

இந்நிறுவனங்கள் புதிய மரங்களை நடுவதற்கு முன்வருவதோடு, இம்மாதிரியான சமூகப் பொறுப்பற்ற செயல்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறில்லையெனின் குடாநாடு வெகு விரைவில் பாலைவனமாவது தவிர்க்கவியலாததாகிவிடும்.

**தேவ.முகுந்தன்.**

# மருந்தாளர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம்

கொழும்பு,ஓக.17

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு மருந்தாளர் பயிற்சி நெறியை யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மூன்று நிலையங்களில் நடத்தவிருக்கிறது. இது இரண்டு வருட பயிற்சி நெறியாகும்.

இலங்கை மருத்துவ சபை நடத்தும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்குத் தயார்படுத்துமுகமாக இப்பயிற்சி நெறி நடத்தப்பட இருப்பதாக சுகாதார அமைச்சின் மாகாணப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை கூறினார்.

வடக்கு - கிழக்கை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட ஜி.சீ.ஈ (சா/த) சித்திபெற்ற 40 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்ப முடிவுதிகதி இம்மாதம் 27ஆம் திகதியாகும்.

பயிற்சிக் காலத்தின்போது சுகாதார அமைச்சு எந்தக் கொடுப்பனவையும் வழங்கமாட்டாது. முதல் வருடத்தில் பிரதி சனி, ஞாயிறு தினங்களிலும், இரண்டாம் வருடத்தில் மாதமொருமுறையும் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

வடக்கு - கிழக்கில் நிலவும் மருந்தாளர் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் நோக்கில் வெளிவாரி பரீட்சைக்குத் தயார்படுத்தும் வகையில் இந்த இரு வருட பயிற்சிநெறி நடத்தப்படுகிறது.

நேர்முகப் பரீட்சையொன்றினூடாக பயிலுநர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள் என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சா/இந்துக்கல்லூரி **A/L 2003** வர்த்தகப் பிரிவு மாணவியும்
மட்டுவிலைச் சேர்ந்தவருமான

**செல்வி இ.சிபானி**

அவர்கள் **3A** பெற்று சித்தியடைந்தமையையிட்டு இவரை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் கல்வியில் பல சிறப்புக்களையும் அடைய வாழ்த்துகின்றோம்.


21/2, பொற்பதி வீதி,
கொக்குவில். (சி-29554)(21-18-19)

நிர்வாகியும், ஆசிரியர்களும
**SANTOSH PCS**

## SPOKEN ENGLISH WITH GRAMMAR CLASSES

★ பிரிவு - II 20-08-2003 5 p.m
தரம் - 09 - O/L மாணவர்களுக்கு
★ பிரிவு - II 22-08-2003 5 p.m
தரம் - 06 -08 மாணவர்களுக்கு
Teach By: **Rajeevan**
யாழ்.சிவப்பிரகாசம் வீதி.
(21317) (21-18-19)

## ஜே.கே. அரம் மற்றும் டிரில் பிட்ஸ்



உலகளாவிய ரீதியில் அரங்களின் பாரிய உற்பத்தியாளர்கள்

இலங்கையில் ஏக முகவர்

**ஜெனரல் இக்விப்மன்ட்ஸ் லிமிடட்**

316, 400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799
பக்ஸ்: 2434637

Talent Media

# கியுபிட் போர்ட் KUPID FORT

(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

**விசாரணைகள் யாழ்.நகரில்**
தொலைபேசி 222- 3191
(21236) (21-18-19)

## இரண்டு வீடுகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், புகையிரத நிலையத்துக்கு அருகில் 3பரப்பு 7குழிகள் கொண்ட காணியில் இரண்டு வீடுகள் உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**S. தனராஜா**
48/3, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(26-21-15-19) (21437)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து நாகராசா

யாழ்ப்பாணம், சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொழும்பு-15 முகத்துவாரத்தில் வசித்தவருமாகிய சரவணமுத்து நாகராசா 09-08-2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் இராசமணியின் அன்புக் கணவரும் தயானந்தன் (கனடா), கமலராணி, அருளாம்பிகை (நெதர்லாந்து), பத்மராணி (ஆசிரியை - முகத்துவாரம் இந்துக்கல்லூரி), பரமானந்தன் (கனடா), மோகனாம்பிகை (கனடா), மனோகரன் (நவீன் செரமிக்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீரஞ்சினி (கனடா), தயாரத்தினம் (அரசாங்க அச்சகம்), குணராசா (நெதர்லாந்து), வாசுகி (கனடா), நாகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் நவீனா, ஜெகதா (இராமநாதன் இந்துக்கல்லூரி), ஜெயகாந், அனுராஜ் (நெதர்லாந்து), தனுஷன், திவ்யா (கனடா), லாவண்யா, தர்ஷிகா, அபிஷன் (கனடா) ஆகியோரின் பேரனும் சுப்பிரமணியம் (Indian Overscas Bank), காலஞ்சென்ற பாக்கியம், சிவஞானம், சின்னத்தம்பி, குணமணி ஆகியோரின் சகோதரனும் தேவிகாராணி (மைத்துனி), சீவரத்தினம், சுப்பிரமணியம், இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு -15, சென்.ஜேம்ஸ், சேர்ச் ஒழுங்கை, 277/59, இல்லத்தில் இருந்து 13-08-2003 அன்று 4.00 மணிக்கு தகனக் கிரியைகள் மாதம்பிட்டி பொதுமயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நா.மனோகரன (மகன்)
(நவீன் செரமிக் - கொழும்பு) 0777 - 319454
(29538)



## உங்கள் திருமணச் செலவில் பெரும் பகுதியை நாம் ஏற்போம்..

பெயாரோஸ் சுபமாங்கல்யம்

உங்கள் திருமணத்தை வெகு விமரிசையாக நிகழ்த்த பெயாரோஸ் விரும்புகிறது. உங்களுக்கு பிடித்த விதத்தில், பிடித்த இடத்தில் திருமணத்தை நடத்தலாம். ஆனால் இந்த வருடத்தில் நடக்க வேண்டும் என்பதே எமது ஒரே வேண்டுகோள்.

- மணப்பெண்ணின் புடவை
- தங்கச் சங்கிலி
- பாதணிகள்
- தோழியர் இருவரின் புடவைகள்
- ஆபரணங்கள்
- பாதணிகள்
- முக அலங்காரம்
- தலையலங்கார ஆலோசனைகள்
- மலர் அலங்காரம்
- மணமேடை அலங்காரம்
- மேசை அலங்காரம்
- திருமண கேக்
- திருமண ஸ்ரக்சர் கேக்
- திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள்
- புகைப்படங்கள்/வீடியோ படங்கள்
- 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள்

இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறையுடன் இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

பெயாரோஸ் சுப மாங்கல்யம், ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிரைவட்) லிமிடட்,
36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01.

முடிவுத் திகதி 2003 ஆகஸ்ட் 31.

அழகுக்கலை ஆலோசனைகளை வழங்கும் அனுசரணையாளர்கள்
Salon Nayana

**FairRose**
Fairness Cream
With Rosewater & Sandalwood Paste



மென்மையான சருமத்திற்கு வெண்மையான முகத்திற்கு

Licence No.: C39/2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நம் நாட்டின் ஆரோக்கியமுள்ள துடுக்கான குழந்தைகள் பேபி ஷெரமி தரும் சுவ சிங்கிதி அதிர்ஷ்டம் மூலம் பெறுமதி வாய்ந்த வீடு ஒன்றை வெல்லும் அரிய வாய்ப்பு...

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி செப்டம்பர் 14

செய்ய வேண்டியவை இவைதான்

- குழந்தையின் அழகிய படம்
- சுகாதாரப் பதிவேடு / நோய்த்தடுப்பு மருந்தூட்டல் பதிவேட்டின் போட்டோப் பிரதி
- பிறப்புச் சான்றிதழின் போட்டோப் பிரதி
- என்பனவற்றுடன் கீழுள்ள கூப்பனை நிரப்பி

"பேபி ஷெரமி சுவ சிங்கிதி அதிர்ஷ்டம்", த.பெ 1870, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பவும்.

பரிசுகளின் விபரம்

- மாபெரும் இறுதிப் போட்டி

**மாபெரும் பரிசு- 20 இலட்சம் பெறுமதியான அழகிய வீடு**

- ஆறுதல் பரிசுகள்- சேமிப்புச் சான்றிதழ்கள் 2வது வெற்றியாளருக்கு ரூ.500,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழுடன் சேமிப்புக் கணக்கு 3வது வெற்றியாளருக்கு ரூ. 300,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழுடன் சேமிப்புக் கணக்கு 4வது வெற்றியாளருக்கு ரூ. 250,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழுடன் சேமிப்புக் கணக்கு 5வது வெற்றியாளருக்கு ரூ. 200,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழுடன் சேமிப்புக் கணக்கு.
- அரை இறுதிப் போட்டி- தங்கப் பவுண்கள் 60

## போட்டியின் விபரம்

• நாடு முழுவதிலுமிருந்து 6-18 மாதக் குழந்தைகள் போட்டியில் கலந்து கொள்ளலாம். • குழந்தைகளின் ஆரோக்கியம், மருத்துவ மதிப்பீடு, துடுக்கு என்பனவற்றை அடிப்படையாக வைத்தே குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்படுவர். • நாடு முழுவதிலுமிருந்து பெறப்பட்ட நுழைவுகளில் இருந்து, கொழும்பு, காலி, கண்டி, பதுளை, அனுராதபுரம், வவுனியா எனப் பிரிக்கப்பட்ட பிராந்திய அடிப்படையில் ஒவ்வொன்றிலிருந்தும் 100 குழந்தைகள் அவ்வப் பிராந்தியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு அரை இறுதிப் போட்டிக்காகப் பட்டியலிடப்படுவர். • 6 பிராந்தியங்களில் இருந்தும் அரை இறுதிப் போட்டியின் பின்னர் ஒவ்வொன்றிலுமிருந்தும் 10 குழந்தைகள் என 60 குழந்தைகள் இறுதிப் போட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர். • முதற் சுற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட /தேர்ந்தெடுக்கப்படாத குழந்தைகள் கடிதம் மூலம் அறிவிக்கப்படுவர். • சட்டுட்டு உயனவில் நடைபெறும் இறுதிப் போட்டியின் போது மாபெரும் வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். இறுதிப் போட்டியின் போது தாய்களுக்கும் சேய்களுக்கும் விநோத நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது பற்றிய விபரங்கள் கடிதங்கள் மூலம் அறிவிக்கப்படும். • போட்டியின் அனைத்து மட்டங்களிலும் அரசாங்க வைத்தியர்கள் அடங்கிய குழுவினாலேயே தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.

## போட்டி ஒழுங்கு விதிகள்

- நாடு முழுவதிலுமுள்ள 6-18 மாதக் குழந்தைகள் அனைத்தும் போட்டிகளில் பங்குபற்றலாம்.
- பத்திரிகைகளில் பிரசுரமாகின்ற நுழைவுக் கூப்பன்களுடன் தேவையான விபரங்கள், குழந்தையின் துடுக்கான படம் என்பனவற்றை அனுப்ப வேண்டும்.
- போட்டி நுழைவுக்கான இறுதி நாள் 14 செப்டம்பர் 2003 ஆகும்.
- ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிறைவற்) லிமிட், கிராண்ட் மெக்கன் எரிக்ஸன், ஒப்டிமம் Q ஆகிய நிறுவனங்களின் ஊழியர்களின் குழந்தைகள் தவிர நம் நாட்டின் அனைத்துக் குழந்தைகளும் கலந்து கொள்ளலாம்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**நுழைவுக் கூப்பன்**

குழந்தையின் முழுப் பெயர் : ..................................................

தாய் / தந்தை / பாதுகாவலரின் பெயர் : ..................................................

முகவரி : ..................................................

தொ.பேசி (இல்லம்) ..................................................(அலுவலகம்) ..................................................

வயது (மாதங்கள்): ..................................................நிறை ..................................................

தலையின் சுற்றளவு (நெற்றியினூடான அளவு) ..........அங்குலம் தாய்ப்பாலூட்டிய காலம் (மாதங்கள்) ..........

உங்களுக்கு அண்மையிலுள்ள பிராந்தியத்தைக் குறிப்பிடவும்.

☐ கொழும்பு ☐ கண்டி ☐ காலி ☐ அனுராதபுரம் ☐ பதுளை ☐ வவுனியா

*இந்தப் போட்டி ஒரு சீட்டிழுப்பல்ல

Grant McCann

Baby Cheramy

பாசத்தின் இதம் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

சக்கோட்டையில் றோட்டுக்கரையில் சகல வசதிகளுடன் கூடிய (கிணறு, மின்சார வசதி) பெரிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜோசப், கடற்கரை வீதி, பருத்தித்துறை. T.P.077 6041215 (21507)

இல.15, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணையில் 3 அறையுடன் கூடிய சகல வசதிகளுடனும் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. பொது நிறுவனங்களுக்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப்படும். மேற்கூறிய விலாசத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும். (21443)

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் 3 பரப்புக் காணியில் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.பரராஜசிங்கம், இல.65, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(21280)

## வீடு வாடகைக்கு

835, நாவலர் வீதியில் [கனகரத்தினம் ம.ம.வி. - (ஸ்ரான்லி) அருகில்] அழகாகத் திருத்தி அமைக்கப்பட்ட பெரியமாடி வீடு ஏற்ற சூழலில் வாடகைக்குண்டு. மருத்துவமனை, ஸ்தாபனங்கள் நடத்துவதற்கு ஏற்ற வசதியுடையது. தொடர்பு: சோ.சிவசுந்தரம், 272,ஆனந்தன்வடலி வீதி, அரியாலை. T.P. 021 222 6338 (21475)

## வீடு, காணி தேவை

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தினின் காரியாலயத்தினை இயககவும் மற்றும் பார்வையற்ற அங்கத்தினர்கள் ஒன்று கூடவும் வீடு அன்றேல் காணி வாடகைக்கோ அல்லது விலைக்கோ தேவை. மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதி விரும்பத்தக்கது. தொடர்பு: 1) 228, பிரதான வீதி, யாழ்ப்பாணம், T.P. 6017, 2) செயலாளர். 151, 2ஆம குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.(21384)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பாவித்த சொனி கலர் T.V. மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஐசிக்கும்ரன், குளக்கரை லேன்,கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P.077 6056483 (21480)

சொந்தப் பாவனையிலுள்ள ரவுண் AC TOYOTA வான் 51-சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: தொலைபேசி இல.0777 734339 (21495)

தச்சுவேலை செய்யும் சீனா் மெசின்கள் 10",12",14",16" ஆகியனவும் மின்சார றில்லர்கள், அலுமினிய கட்டிங் மெசின், வெல்டிங் டிரான்ஸ்போமர்கள், ஜெனரேற்றர்கள் ஆகியனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கி.சுதாகரன், இல.20, 2ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர். (21409)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் நாகபூஷணி அம்மன் கோவில் மேற்கு வீதி றோட்டில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: நா.நடராசா, இந்துக்கல்லூரி வீதி, உரும்பிராய் வடக்கு. (21421)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 160/-. மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 1.மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். 2.பொன்னாலை வீதி, விதானைவளவு, மானிப்பாய் 3. மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். (21336)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.3529, 2867 (21492)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள (விலை 45/-) தடுப்பூசி போடப்பட்ட சிவப்பு சேவல் குஞ்சுகள் (விலை 15/-) 25-08-2003 பிற்பகல் விநியோகிக்கப்படும் க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21417)

## ஆங்கிலம்

பல்கலைக்கழக புகுமுக A/L மாணவர்களுக்கான ஆங்கிலம் தனியாகவும் குழுக்களாகவும் கற்பிக்கப்படும். தொடர்பு: நாகேந்திரம், 34/4, (புதியது 82/24) செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (21428)

## தவறிவிட்டது

சிவயோகசுந்தரி கணேசமூர்த்தி என்பவரின் தேசிய அடையாள அ.அ. (இல.438061681V), விசேட அ.அ.(இல.0902024096) என்பன சிறு தொகைப் பணத்துடன் 15-08-2003 இல் கஸ்தூரியார் வீதியில் தவறிவிடடன. கண்டெடுத்தவர்கள் கோ.கிருபாகரன், சம்பியன் லேன், கொக்குவில் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (21499)

## திருமண சேவை

1974, கேட்டை, செவ்வாய் 8, Software Engineer Analustக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. (தீவுப் பகுதியும் ஏற்றுக்கொள்ளப்படும்.) உள்ளூர், வெளியூர் மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.(21518)

பட்டதாரிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், வர்த்தகர்கள் எல்லா நாட்டிலும் வசிக்கும் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் நியாயமாக விவாகரத்துச் செய்யப்பட்ட மணமக்களும எம்மிடம் உண்டு. தொடர்பு: காலை 10.30 முதல் 6.00 மணிவரை, (புதிய நேரம்) கமலக்கண்ணன், 298, கோயில் வீதி, நல்லூர். (21515)

## மணமகன் தேவை

யாழ்.கௌரவ கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த 5'2" உயரமும் 32 வயதுடைய, அழகும், மெல்லிய தோற்றமும், நற்குணங்களும் உள்ள கணனித் துறையில் வேலை செய்யும் மணமகளுக்கு நற்குணமுள்ள தகுந்த மணமகன் தேவை. தகுதியுடையவர்கள் குடும்ப விவரங்களுடன தொடர்புகொள்ளவும். விள.இல. 1987, உதயன், யாழ்ப்பாணம்.(21487)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வயது 33, சித்திரை, 3ஆம் பாதம், பிரான்ஸில் தொழில் புரியும் மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. தொடர்பு: விள. இல.1986, மே/பா உதயன். (21471)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணிபுரியும் லண்டன் பிரஜாவுரிமையுள்ள 1972 ஆம் ஆண்டு பிறந்த, விசாக நட்சத்திரமுள்ள மணமகனுக்கு 5அடி உயரமுள்ள, அழகிய மணமகள் தேவை. விவரங்களுக்கு: கிருஷ்ணமூர்த்தி (தேவி அச்சக ஒழுங்கை), யாழ்ப்பாணம். T.P.2789 (21337)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1966ஆம் ஆண்டு பிறந்த, மிருகசீரிடம் 2ஆம் பாதம், கொழும்பு பிரபல தனியார் நிறுவனமொன்றில் கடமையாற்றும் (Chief Executive Cash Dept.) சைவ போசன மணமகனுக்கு படித்த, பண்பான மணமகள் தேவை. தொடர்பு: வி.இல. 1988, மே/பா உதயன். (21504)

## மனையடி வாஸ்து சாஸ்திரம்

உங்களது சகல குறைகளையும் நிவர்த்தி செய்துகொள்ளவும், புது மனை நிலையம் (மனைப் பொருத்தம்) பார்க்கவும் நீங்கள் அணுக வேண்டிய இடம்: S.S யோகராஜ், வாஸ்து வல்லுநர், 44/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 6082534 (சி-29525)

## இசைக்குறிப்புகள்

ஓகன், வயலின், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் இசைக் குறிப்புகள் (பாகம 1-13) வெளிவந்துள்ளன. தொடர்பு: இல.75, கோவில் வீதி, (நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தெற்கே) T.P.0777 031293 (பதிவுத் தபாலில் பெறலாம்.) (21428)

## கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.17

கிளிநொச்சி மாவட்டத்திற்கான பிராந்திய ஆணையாளராக திருமதி சிவலிங்கம் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய ஆணையாளராக இருந்த எஸ்.சுந்தரம் வவுனியா - மன்னார் ஆணையாளராக இடமாற்றம் பெற்றதைத் தொடர்ந்தே, திருமதி சிவலிங்கம் கிளிநொச்சி மாவட்ட ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பிரசித்தி பெற்ற நிறுவனங்களில் கீழ் கண்ட வேலைகளுக்கு உடனடியாக ஆள்கள் தேவைப்படுகின்றார்கள். பொருத்தமானவர்கள் உடனடியாக பாஸ்போட். சான்றிதழ ஆகியவற்றுடன் காரியாலயத்திற்கு வரவும். நேர்முகப் பரீட்சைகள் தினசரி எங்களது காரியாலயத்தில் நடைபெறுகின்றன.

## DUBAI-டுபாய்

| | | | | |
|---|---|---|---|---|
| தொழிலாளர்கள் | - Labourers | - 650 - | | DHS+ உணவு |
| குளிர்சாதன மெக்கானிக் | - A/C Mechanic | - 1,000 - | | DHS |
| சுத்திகரிப்பாளர் | - Cleaners | - 600 - | | DHS |
| ரிகர் | - Rigger | - 750 - | 900 | - DHS |
| டின்கர் | - Tinker | - 800 - | 900 | - DHS |
| வெல்டர் | - Welder | - 800 - | 1,000 | - DHS |
| கார்ப்பென்டர் | - Carpenter | - 800 - | 1,000 | - DHS |
| குழாய் பொருத்துநர் | - Pipe Fitter | - 800 - | 900 | - DHS |
| மேசன் | - Mason | - 800 - | | DHS |
| எலக்ரீஷியன் | - Electrician | - 800 - | 1,000 | - DHS |
| பிளம்பர் | - Plumber | - 800 - | 1,000 | - DHS |
| சாரதி (டுபாய் லைசென்) | - Driver (Dubai Licence) | - 900 - | | DHS |
| ஸ்டீல் பெப்ரிகேட்டர் | - Steel Fabricator | - 950 - | | DHS |
| இரும்பு வேலை செய்வோர் | - Blacksmith | - 950 - | | DHS |
| சமையற்காரர் | - Cooks | - 1,000 - | | DHS |
| கணக்காளர் | - Accountant | - 2,500 - | 3,000 | - DHS |
| சிவில் இஞ்சினியர் | - Civil Engineer | - 3,000 - | | DHS |
| சிவில் போர்மன் | - Civil Foreman | - 1,200 - | | DHS |
| மெகனிகல் இன்ஜினியர் | - Mechanical Engineer | - 2,500 - | | DHS |
| டக்ட் இரக்டர் | - Duct Erector | - 900 - | | DHS |
| டக்ட் இன்சுலேட்டர் | - Duct Insulator | - 900 - | | DHS |
| இலக்ட்ரிகல் போர்மன் | - Electrical Foreman | - 1,900 - | | DHS |
| டக்டிங் போர்மன் | - Ducting Foreman | - 1,900 - | | DHS |
| பிளம்பிங் போர்மன் | - Plumbing Foreman | - 1,900 - | | DHS |
| கனரக வாகன சாரதி (கல்வ் லைசென்ஸ்) | - Heavy Duty Driver (Gulf Licence) | - 1,200 - | | DHS |
| சிறியரக வாகன சாரதி (கல்வ் லைசென்ஸ்) | - L/V Driver (Gulf Licence) | - 1,000 - | | DHS |
| கனரக வாகன மெக்கானிக் | - H/V Mechanic | - 1,000 - | 1,400 | - DHS |
| வாகன மின்னியலாளர் (ஒடோ இலக்ட்ரீசியன்) | - Auto Electrician | - 1,300 - | | DHS |
| புத்தகம் கட்டுபவர் (புக்பைண்டர்) | - Book Binders | - 800 - | | DHS |
| குழாய் பொருத்துனர் | - Pipe Fitter | - 1,000 - | | DHS |
| அச்சு இயந்திர இயக்குநர் | - Printing Machine Operator | - 1,000 - | | DHS |
| காரியதரிசி | - Secretary | - 1,000 - | 1,500 | - DHS |
| நில அளவையாளர் | - Land Surveyor | - 3,000 - | | DHS |

## DOHA QATAR-டோஹா கட்டார்

| | | | | |
|---|---|---|---|---|
| புரோகிராம் எனலைஸ்ட் | - Programme Analyst | - 2,500 - | 3,000 | - QR |
| நில அளவையாளர் | - Land Surveyor | - 3,000 - | 3,500 | - QR |
| குவான்ட்டிடி சேர்வேயர் | - Quantity Surveyor | - 4,000 - | 6,000 | - QR |
| தொழிலாளர்கள் | - Labours | - 700 - | | QR |
| மேசன் | - Mason | - 750 - | | QR |
| கார்பென்டர்ஸ் | - Carpenter | - 800 - | | QR |
| கம்பி கட்டுபவர் | - Steel Fixer | - 750 - | | QR |
| இலக்ட்ரீசியன் | - Electrician | - 1,000 - | | QR |
| ரீகர் | - Rigger | - 800 - | | QR |
| குழாய் பொருத்துநர் | - Pipe Fitter | - 850 - | | QR |
| ஐடுரோலிக் மெக்கானிக் | - Hydrolic Mechanic | - 1,000 - | | - QR |
| டீசல் மெக்கானிக் | - Diesel Mechanic | - 1,200 - | | QR |
| அலுமினியம் பெப்ரிகேட்டர் | - Aluminium Fabricator | - 1,000 - | | QR |
| பிளம்பர் | - Plumber | - 800 - | | QR |
| பிளம்பர் உதவியாளர் | - Asst. Plumber | - 500 - | | QR |
| A/C மெக்கானிக் | - A/C Mechanic | - 800 - | 1,000 | - QR |
| டக்ட் இரக்டர் | - Duct Erector | - 800 - | | QR |
| வெல்டர் | - Welder | - 800 - | 1,000 | - QR |
| கேபல் ஜொஜின்டர் | - Cable Jointer | - 800 - | 1,000 | - QR |

## SAUDI ARABIA-சவுதி அரேபியா

| | | | |
|---|---|---|---|
| மேசன் | - Mason | - 900 - | SR |
| இலக்ரீசியன் | - Electrician | - 950 - | SR |
| பிளம்பர் | - Plumber | - 900 - | SR |
| காபென்டர் | - Carpenter | - 900 - | SR |
| வெல்டர் | - Welder | - 950 - | SR |

## KUWAIT FOOD STUFT COMPANY

## குவைட் உணவுப் பொருள்கள் கம்பனி தொழிற்சாலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிறிய ரக வாகன சாரதி (குவைத் லைசன் வைத்திருப்போர்) | - L/V Driver - (Kuwait Licence Holder) | - 60KD | + | 15 | KD |
| கனரக வாகன சாரதி (குவைத் லைசன் வைத்திருப்போர்) | - H/V Driver - (Kuwait Licence Holder) | - 85KD | + | 15 | KD |
| சமையற்காரர் | - Chief Cook | -100KD | + | 15 | KD |
| உதவி சமையற்காரர் | - Asst. Cook | - 70KD | + | 15 | KD |

### நிபந்தனைகள்

2-3 வருட ஒப்பந்தம்.
சாப்பாடு அலவன்ஸ் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.
மருத்துவம் இலவசம்.

இரண்டு வருடம் முடிந்த பின் மீண்டும் இலங்கை வர விமான டிக்கட் இலவசம்.

உடனடியாக அனுக வேண்டிய முகவரி:

**தனா மேன்பவர் (பி) லிமிட்ட்**

104, 2ஆம் மாடி, செட்டியார் தெரு,
கொழும்பு 11. தொ.பே: 075-333346-9

லைசன் இல: 701

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| சந். | ராகு | | சனி |
|---|---|---|---|
| செ. | இராசிச் சக்கரம் | | சூ. ▲ வெ. |
| | | | வியா. புதன் |
| | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 17-08-2003 - 23-08-2003

### மாற்றம்:

ரேவதி-மீனத்தில் (இராசியில்) சந்திரன் நிற்கும்.

நெடுந்தூரப் பேச்சு தொடரும் 2005இல் நடக்க இருக்கும் அரசியல் மாற்றங்களுக்கு அடிகோலும். அதற்கிடையில் தேர்தலும் வந்து போகும். இந்தியா தலையிடும். சமாதானப் பேச்சு ஒரு தீர்வுக்கு வரும். உலகநாடுகள் இறுக்கமாகக் சொல்வதையும் - செய்வதையும் செய்யும். தற்காலம் இந்தியாவில் - வன்முறைகள் விட்டுவிட்டு கொடுக்கும். அமெரிக்கா - மேல் நாட்டுப் படைகளுக்கு சோதனையான காலமாகும். ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் - பலஸ்தீனம் - ஈராக் - ஈரான் போன்ற நாடுகளில் அழிவுகளை - மேல்நாட்டுப் படைகள் செய்வது அதிகரிக்கும். இந்துசமுத்திரத்தில் காலநிலை மாறும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

கருத்து வேற்றுமை வீட்டில், உழைப்பில் ஊக்கம், தொழில் ஸ்தானத்தில் வரவேற்பு, கற்பனை, கொடுத்தது வராத கவலை, பிரயாண சிந்தனை, நண்பர்கள் உதவுதல், குடும்பத்தினருக்கு சுபகாரியங்கள் நடக்க ஓடியாடித்திரிவீர்கள். சீறிச்சினக்காமல் கருமமாற்றி புகழடைவீர்கள். மாணவர்கள் புதிய துறை நாடுதல், விவசாயிகள் இலாபம் அடைவர்கள் .

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வெள்ளி, சனி.*

### இடபம்

அழகிற்கு முதலிடம் கொடுத்து மயங்குவீர்கள், எதிர்ப்பாலார்கள உதவுவார்கள், வாக்குக்கலகம், புதிய முயற்சி எடுப்பீர்கள், திட்டங்களால் நன்மை அடைவீர்கள். செலவுகள் அதிகரித்தல் வீட்டாருக்கு நன்மை, பொருள் வரவு அதிகரிக்கும், தூரத்துச் செய்திவரும், புதிய உறவு வரும். உங்கள் பலவீனமறிந்து சிலர் தொல்லை தருவார். நாரிநோ வரும். வைத்தியத் துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.*

### மிதுனம்

வார்த்தைகளை அளந்து பேசுங்கள் அல்லது நாலு சனம் நாலு விதமாக உங்களைப்பற்றி கதைக்கும். விரோதிகள் உங்களைக்கண்டு பதுங்குவர். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். பிறருக்கு உதவி செய்ய அது உபத்திரவமாக மாறும். அதிஷ்டம் வருமென சுவிப் எடுத்து காசைச் செலவு செய்யாதீர்கள், அடிக்கடி சனீஸ்வரனால் தொல்லைகள் வரும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடாது விலகி நடவுங்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி*

### கடகம்

வீட்டில் சிறிய விஷயங்களுக்கெல்லாம் வாக்குவாதப்பட்டு அவசரத்தில் வார்த்தைகளை அள்ளி வீசாதீர்கள். தூரத்துச் செய்திகள் கொடுக்கும். உதயத்தில் ஆதித்தன் இருப்பதனால் அடிக்கடி கோவப்படுவீர்கள். பொருள் வரவு மந்தநிலை கொடுக்கும். தொழிலில் ஊக்கம், மேலதிகாரிகள் உதவுவார்கள். சலவருத்தம் வைத்தியத்தால் நன்மை வரும். புத்திரர் வரவு நன்மை கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.*

### சிங்கம்

சீறிச் சினக்காதீர்கள், பிரயாணச் சிக்கல், ஏமாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. புதிய இடமாற்றங்கள், கிடைப்பது கிடைக்கும், தெய்வதரிசனம், புதிய பொறுப்பொன்று வரும். பணவரவு சுமாராக இருக்கும். வயிற்றுநோ - சளி பீடைவரும், நண்பர்கள் கேலி செய்வர், சிலர் கஷ்டங்கள் தருவார்கள். பொருள் - கொடுக்கல்வாங்கல்களை எழுத்தில் வைக்கவும் அல்லது உங்கள் தடுமாற்றத்தைக் பிறர் இலாபமாக்கிக் கொள்வர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.*

### கன்னி

உலகவாழ்வு பொருளை மையப்படுத்தும் பொருளால் உங்களுக்குப் பிரச்சினைகள் வந்து போகும். வீட்டில் பிரச்சினை வரும். இனஜனங்களின் ஆலோசனையை கேட்டு நடக்கவும். உடல் பலவீனப்படும். தலை வருத்தம், நரம்புவருத்தம் வரும். மூன்றாவது ஆளை ஆலோசனைக்கு கூப்பிட்டு உள்ள நிம்மதியை இழக்காதீர்கள். பிரயாணங்களை தவிர்க்கவும். பொருள் வரவு அதிகரிக்கும். தெய்வ வழிபாடு முக்கியம். தொழிஸ்தானத்தில் சனி நிற்பதனால் தொழில ஸ்தானத்தில் வீண்பிரச்சினைகள் வந்து அமைதியைக் குலைத்து விடும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வெள்ளி, சனி.*

### துலாம்

உதயத்தில் ஞானகாரனான கேது நிற்பதனால் எதிலும் ஒரு தாமதம் வரும். தொழில்ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை, ஆனால், பொருள் வரவு இருக்கும். உடல்நிலை பாதிப்பு வைத்தியம் செய்யவும். நண்பர்கள் உதவுவார்கள், இடம் மாற்றம் பிரயாணங்களைத் தவிர்க்கவும். தொழில்ஸ்தானத்தில் ஆதித்தன் நிற்பதனால் அதிகாரம் வரும். ஆனால் பிரச்சினைகள் வரும். உறவினர்கள் உதவுவார்கள். வியாபாரிகள் அதிக இலாபங்கள் அடைய வாய்ப்பு ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-திங்கள், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

கலகலப்பான காலம், காசு, பொருள் இழப்பு உண்டு. உறவினர் வருவர். பிரயாண சிந்தனை , தூரத்து உறவினர்கள் உதவுவார்கள். கோவிக்காதீர்கள். தூரத்துச் செய்தி பயத்தைத் தரும். சலவருத்தம், கால் வருத்தம், தொண்டைநோ வரும், குளிர் விறைப்பு கொடுக்கும். தொழில்ஸ்தானத்தில் போட்டிகள் வர இடம் உண்டு. இரும்புத் தொழில் வியாபாரிகளுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வெள்ளி.*

### தனுசு

உடன்பிறந்தவர், அருகில் இருப்போர் உபத்திரவம் தருவர். குடும்பத்தில் கருத்து வேற்றுமை வரும். தோல், கால், பகுதியில் வருத்தங்கள் வரும். பதவிக்குப் போட்டி போட்டவர் பாதைமாறிப் போவர். அலைச்சலுண்டு. ஆனால், பணவரவு இருக்கும். இடமாற்றங்களை, தூர தேசப்பிரயாணங்களை தவிர்க்கவும் அல்லது இழப்புக்கள் வரும்.

*அதிஷ்டநாள்கள்:- ஞாயிறு, திங்கள், வெள்ளி*

### மகரம்

ஒரு சந்தர்ப்பம் முன்னேற வரும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். வெளியிடங்களிலிருந்து பழக்கங்கள் வந்து நீங்கள் திசை மாறுவீர்கள். தாயாருக்கு யோசனை, உடல்நிலை பாதிப்பு வரலாம். புதிய இடம், புதிய முயற்சி உயர்ச்சி தரும். பிறரை எடுத்தெறிந்து பேசாதீர்கள். சூரியனும், வெள்ளியும் பார்ப்பதனால் அடிக்கடி மனக் குழப்பம், கருத்து வேற்றுமைகள் வரும். தெய்வவழிபாடு செய்து வரவும்.

*அதிஷ்டநாள்கள்:- ஞாயிறு, திங்கள், சனி.*

### கும்பம்

பிறர்மனம் அறிந்து செயற்படுங்கள். ஏன் அடிக்கடி கோபித்து உங்களைப் பலவீனப்படுத்துகிறீர்கள். பொறுமையாக இருக்கவும். பிறருக்கு உதவி, மேலதிகாரிகளுடன் கருத்து மாற்றம், பிடிவாதம், புதிய பொறுப்பு, பொருள் இழப்பு வரலாம். கால், தோல் உபாதை வயிற்றில் பொருமல், குருத்தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு நன்மையான மாற்றங்கள். தெய்வ வழிபாட்டுச் சிறப்பு என்பன வர இடமுண்டு.

*அதிஷ்டநாள்கள்:- ஞாயிறு, திங்கள், வியாழன், சனி.*

### மீனம்

சமநிலைப்போக்கு, வியாபாரசிந்தை, சளி உபாதை, மன மாற்றம் என்பன கொடுக்கும். தேவையற்ற விஷயங்களுக்காக அதிக யோசனை. நண்பர்களுக்கு உதவி செய்தல், தூர இடங்களுக்கு போய்வரல், இனஜன விரோதம், பொருள்வரவு, தொழில்சிறப்பு என்பன வரும். பிரயாணங்களில் இழப்புக்கள் வரலாம். எனவே கவனமாக இருக்கவும்.

*அதிஷ்டநாள்கள்:- ஞாயிறு, திங்கள், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

# மருதங்கேணியின் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகள் பருத்தித்துறையுடன் இணைப்பு.

யாழ்ப்பாணம்,ஓக.17

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகள் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்துடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்து கிராம சேவை அலுவலர் பகுதியில் வாழும் மக்கள் தமது தேவைகளை பூர்த்திசெய்வதற்கு, நாகர்கோவில் - மருதங்கேணி வீதி படையினரால் மூடப்பட்டுள்ளதை அடுத்து முகமாலையைச் சுற்றி 30 மைல் கடந்து மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைக்குச் செல்ல வேண்டியிருந்தது.

இதனால் மேற்படி கிராம அலுவலர் பிரிவு மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியும் வந்தனர்.

குறிப்பிட்ட பிரதேச மக்களின் சிரமங்களை நேரில் அவதானித்த உதவி அரச அதிபர் பணிமனை அதிகாரிகள் இது குறித்து உரிய நடவடிக்கை எடுத்ததுடன் -

ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளையும் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்துடன் தற்காலிகமாக இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்றும் - கூறப்பட்டது. (எ)

# மலிவு விலையில் வெங்காயம்

யாழ்ப்பாணம்,ஓக.17

புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில் வெங்காயத்தின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. கிலோ ஒன்று ஐந்து ரூபாவில் இருந்து எட்டு ரூபா வரையே விற்பனை செய்யப்படுகின்றது.

இப்பகுதிகளில் தொடர்ந்து பெய்த மழையால் வெள்ளத்தில் வெங்காயப் பயிர்கள் மூழ்கி சேதமடைந்துள்ளன. அதனால், அறுவடைக்கு இன்னும் சில நாள்கள் மாத்திரம் உள்ள பயிர்களை கிளறி எடுத்து விவசாயிகள் மலிவு விலையில் விற்று வருகின்றனர்.

அறுவடைசெய்து தோட்டத்தில் உலர்வதற்காக விடப்பட்ட வெங்காயமும் வெள்ளத்தில் சேதமாகியுள்ளது. (ஒ-15)



சுன்னாகத்தில் நிறுவப்படவுள்ள இலங்கை வங்கியின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் நடுவதைப் படத்தில் காணலாம். (எ)

## சிமெந்து பைக்கற்றுகள் கொழும்புத்துறையில் விநியோகம்

அரியாலை,ஓக.17

கொழும்புத்துறை ஏ.வி.றோட்டைச் சேர்ந்த மக்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சிமெந்து பைக்கற்றுக்கள் வழங்கப்படவுள்ளன.

கொழும்புத்துறை சமுர்த்தி செயலணியால் ஒதுக்கப்பட்ட இந்த சிமெந்து பைக்கற்றுக்கள் இப்பகுதியைச் சேர்ந்த 37 குடும்பங்களுக்கு பகிர்ந்து வழங்கப்படும் என்று மேற்படி செயலணியின் உபதலைவர் யோ.சுபநேசன் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் சேதமடைந்த வீடுகளின் திருத்த வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டே சமுர்த்தி செயலணி இந்தச் சிமெந்து பைக் கற்றுக்களை கட்டம்கட்டமாக வழங்கி வருகின்றது என்றும் - அவர் தெரிவித்தார். (எ-17)

## கருத்தரங்கும் செயலமர்வும்

வலிகாமம் தெற்கு,ஓக.17

சர்வானந்த மயபீடம் நடத்தும் கருத்தரங்கும் செயலமர்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு ஆனைப்பந்தி வேதசிவாகம குருகுல கலாசாலையில் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம் இதில் பிரதம விருந்தினராக் கலந்துகொள்வார்.

"சோதிடமும் வானியலும்" என்ற தலைப்பில் வேதசிவாகம குருகுல கலாசாலை சோதிட ஆசிரியர் சி.இரத்தின வடிவேல் கருத்துரை வழங்குவார்.

பிரமஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) தலைமையில் "இந்துக் கிரியைகளில் பொதுமக்களின் ஈடுபாடு [illegible] தேவையா?" என்ற தலைப்பிலான பட்டிமன்ற நிகழ்வும் இடம்பெறும். (எ-152)

# நூல் வரிசை



நூல்: மெய்யியல்
ஆசிரியர்: பேராசிரியர் நா. ஞானகுமாரன்

பேராசிரியர் நா.ஞானகுமாரனின் 'மெய்யியல்' என்ற நூல் மெய்யியல் குறித்து அறிய விரும்பும் அனைவருக்கும் பயனுள்ளதாக வெளிவந்துள்ளது. மேலைத்தேய மெய்யியலுக்கும் கீழைத்தேய மெய்யியலுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை ஆசிரியர்,

"இயற்கை சார்ந்த பிரச்சினைகளுக்கு மேலைத்தேய மெய்யியல் பெரிதும் அழுத்தம் கொடுத்ததாகவும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்குச் சீன மெய்யியல் அழுத்தம் கொடுத்ததாகவும் உளவியல் சார்ந்த பிரச்சினைகளுக்கு இந்திய மெய்யியல் அழுத்தம் கொடுத்ததாகவும் கொள்ளலாம்" என்று கூறுகிறார்.

தொடர்ந்து ஒவ்வொரு மெய்யியலையும் விளக்கும்போது ஏனைய மெய்யியற் பண்புகளுடன் ஒப்பிட்டு ஆசிரியர் கூறுவது பயனுடையதாயுள்ளது. சீன மெய்யியல் பற்றிக் கூறுமிடத்து ஆசிரியர் சீன நாடு ஏன் கொம்யூனிஸ் நாடாக மாறியது என்பது விளங்கிக் கொள்ளத்தகக வகையிலேயே விவரிக்கின்றார். ஜப்பானிய மெய்யியலின் அடிப்படைகளாக சிந்தோவினையும் பௌத்தத்தினையும் ஆசிரியர் இனங்கண்டு விளக்குகிறார். அறிவுக்கு விருந்தளிக்கும் நூலாகப் பேராசிரியர் ஞானகுமாரனின் மெய்யியல் அமைகின்றது. அறிவியல் தமிழைப் பயன்படுத்தி மிகக் கருகலான விடயங்களையும் இலகுவாக விளங்கிக் கொள்ளத்தக்கதாய் அமைத்துள்ளார். நூலின் அட்டைப் படம், அச்சடிப்பு, ஒழுங்கமைப்பு எல்லாம் நன்றாக அமைந்துள்ளன. தமிழ்மொழியூடாக உயர்ந்த அறிவியலைத் தரும் இந்நூல் ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்.**



நூல்: விழித்தெழுவோம்
ஆசிரியர்: செம்பியன்செல்வி

செம்பியன் செல்வி (மலர் சின்னையா) எழுதிய 'விழித்தெழுவோம்' என்ற சிறுகதை மூலம் சிறந்த விழுமியங்களை சிறுவர்களை உணர வைக்கமுடியும். இதில் கஷ்டப்பட்டவருக்கு உதவுதல், முதியோருக்கு உதவுதல் போன்ற நற்பண்புகள் எடுத்துக்கூறப்படுகின்றன. அதேவேளையில் சிறந்த நட்பு எவ்வாறு அமையவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. உண்மையான நட்பு, சாதி, சமயம் பார்க்காது, அதேவேளையில் அனைத்து மதங்களையும் சமநோக்காகப் பார்க்கவேண்டும் என்ற ஆழமான உட்கருத்தையும் தெரிவித்து நிற்கின்றது. சிறியோர் செய்யும் சிறு பிழைகளைப் பெரியோர்கள் பொறுப்பதுபோல என்ற பழமொழி பெரியோர் செய்யும் பிழைகளை சிறியோர் பொறுத்தல் என்று மாற்றி அமைக்கப்பட்ட விதமும் சிறப்பாக அமைந்துள்ளது. தன்னுடைய மதம்தான் சரி என்று வாதிடும் மதவெறியருக்கும் நல்ல படிப்பினையினைப் புகட்டுவதாகவும் இது அமைகின்றது.

**திருமதி பி.பி.எம்.விக்ரர் லெம்பேட்**
உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கை அம்மன் உற்சவத்தை முன்னிட்டு விசேட ஏற்பாடுகள்

எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு பல விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே ஆலய மஹோற்சவ காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ ஆலயச்சுற்றாடலில் அமைக்கப்படும் உணவுச்சாலைகள் மற்றும் குளிர்பான நிலையங்களினால் சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

★ தேர், தீர்த்தம், சப்பரம் மற்றும் வேட்டைத்திருவிழா நாள்களில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையும், தனியார் பஸ்களும் இரவு 8.30 மணிவரையும் - ஏனைய திருவிழா நாள்களில் இரவு 7.30 மணிவரையும் ஆலயத்துக்கான சேவைகளை நடத்த வேண்டும்.

★ சுத்தமான குடிதண்ணீர் விநியோகிக்கப்பட வேண்டும்.

★ போக்குவரத்துச்சபை பஸ்களும் தனியார் பஸ்களும் ஆலயப் பகுதியில் நிறுத்தப்படக்கூடாது. அருகில் உள்ள தனியார் காணிகளில் நிறுத்தப்பட வேண்டும்.

★ மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் அவசர முதலுதவிச் சிகிச்சைப் பிரிவொன்றை ஆலய வீதியில் அமைத்தல்.

★ தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் தற்காலிக பணிமனை ஒன்றை ஆலய வீதியில் அமைத்தல்.

★ வீதி ஒழுங்குகளைப் பேணவும், அடியார்களுக்கான பிரச்சினைகளை அணுகவும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவையும் சாரணர்களையும் ஈடுபடுத்தல்.

(எ-10-86-150)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்

**கந்தையா பொன்னுத்துரை**

அவர்கள் 12.08.2003 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(21529) (25-11-18-31)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 12 - 07 - 1913



உதிர்வு 16 - 07 - 2003

**அமரர் இராமலிங்கம் சிதம்பரநாதர் அவர்கள்**

(கைதடி வீரகத்தி பிள்ளையார் கோவில் முதலாய கோயில்களின் முன்னாள் பரம்பரைத் தலைவர்)

அமரர் இராமலிங்கம் சிதம்பரநாதர் அவர்கள் இவ்வாலயத்தில் நீண்டகாலமாக முகாமையாளராகச் செயற்பட்டு இவ்வாலயம் மேலும் திறம்பட நடைபெற வேண்டுமென்ற நன்னோக்குடன் 1976ஆம் ஆண்டு தொடக்கம் பரம்பரை உறுப்பினர்கள், மஹோற்சவ உபயகாரர்களை உள்ளடக்கிய நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபையை ஸ்தாபித்த பெரியவராவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வீரகத்தி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் முதலாய கோயில்கள்.*

நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபை.

(21524) (25-11-18-31)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 14 - 11 - 1919



உதிர்வு 18 - 07 - 2003

**அமரர் மாரிமுத்து செல்வத்துரை**

(ஓய்வுபெற்ற பிரிட்டன் இராணுவ உத்தியோகத்தர், ஓய்வுபெற்ற சுகாதார திணைக்கள உத்தியோகத்தர், முன்னாள் டிப்பனர் றிங்கோ ஸ்தாபகர், கனடா)

பண்பின் திருவுருவே, பாசத்தின் உறைவிடமே
பார்புகழ வாழ்ந்துவிட்டு பறந்தோடிச் சென்றீரோ!
சொந்தங்கள் தவித்திருக்க, சோகத்தில் திளைத்திருக்க
சொர்க்கவாசல் தேடி நீரும் சோதியிலே கலந்தீரோ!
மறுபடியும் ஒருதடவை மண்ணில் நீர் வருவீரென
மட்டற்ற எதிர்பார்ப்பில் மன்றாடுகின்றோமே!
மகிழ்விக்க மீண்டும் மாண்புடனே வாருமையா!
மக்கள் எம் மனதினிலே மனசாந்தி தாருமையா!

இன்று (17.08.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கல்லூரி வளாகம், அளவெட்டி.*

மகன் செ.செல்வநேசன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

(21530) (26-11-18-31)

## மீள் குடியமர்வு கொடுப்பனவு பதிவுகள் அடுத்தவாரம்

தென்மராட்சி,ஓக.17

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களில் உடனடி மீளக்குடியமர்வு கொடுப்பனவுத் தொகையான ரூபா 25ஆயிரம் பெறுவதற்குரிய படிவங்களில் இதுவரை கையொப்பம் இடாத குடும்பங்களுக்கான பதிவுகள் அடுத்தவாரம் சில கிராம அலுவலர் பிரிவுகளில் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-117)

## சிதம்பரா மாணவர்களுக்கு லண்டனிலிருந்து காலுறை

யாழ்ப்பாணம்,ஓக.17

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் பழைய மாணவர்களால் கல்லூரி மாணவர்களுக்குக் கென 3 லட்சம் ரூபா பெறுமதியான சப்பாத்து மற்றும் காலுறைகள் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் ஊடாக வழங்கப்பட்ட இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளைக் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(எ-10)

## விசர் நாய்க்கடிக்கு 7பேர் இலக்காகினர்

தெல்லிப்பழை,ஓக.17

மல்லாகம் கோணப்புலம் அகதி முகாமருகே விசர்நாய் ஒன்று ஐந்து பேரைக் கடித்துக் குதறியது. கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றது.

தமது வீட்டுமுற்றத்தில் நின்றிருந்த இருவரை எங்கிருந்தோ வந்த விசர்நாய் கடித்தது. இதனையடுத்து அயலவர் சிலர் விசர்நாயை பிடிக்க முற்பட்டனர். அப்போது மேலும் மூவரை அந்த நாய் கடித்துவிட்டு தப்பியோடி விட்டது. இந்த விசர்நாய் அப்பகுதியிலிருந்த சில வளர்ப்பு நாய்களையும் கடித்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை மீசாலை கிழக்கைச் சேர்ந்த மகேந்திரன் கானுசன் (வயது 9) சாவகச்சேரியைச் சேர்ந்த வ.சிவபாலசுந்தரம் (வயது 60) ஆகியோரும் விசர்நாய்களால் கடியுண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ-117-150)


**நாடகமும் அரங்கியலும்**
**I. சத்தியா**

A/L - 2004 PAPER சனி, ஞாயிறு 3.00 p.m. (ப.நே.)
A/L - 2005 சனி, ஞாயிறு 4.00 p.m. (ப.நே.)
Day Class திங்., செவ்., புதன்., வியா. 10 மணி (ப.நே.)
ஆரம்பம்: இன்று மாலை 3மணி (ப.நே.)
துகழ் K.K.S. வீதி, இணுவில்.
Note: எழுதுவினைஞர் ஒருவர் தேவை. நேரில் வருகை தரவும்.
(21523) (26-11-18-31)

**THE BARBARA MULVANEY**
**Computer Training Centre**
123, Temple Road, Jaffna

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

அனைத்துப் பாடநெறிகளுக்குமான வகுப்புக்கள் 20ம் திகதி ஆரம்பமாக இருப்பதுடன் Internet & E-Mail கற்கைநெறிக்கான புதிய பிரிவும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மாணவர்களே! இன்றைய புதிய கணனி யுகத்தில் உங்களை நுழைவிப்பதற்கு முதல் படியாகவும் தொடர்ந்து வரும் அடுத்த விடுமுறையையும் பயனுடையதாக்கிக் கொள்ள புதிய பாடவிதானம் ஒன்றை இணையத்தினூடாக அறிமுகப்படுத்தவுள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம். மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

INTERNET & BROWSING FACILITIES AVIALABLE HERE
T.P:-222 - 5971


## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

தோற்றம் 12 - 07 - 1913



மறைவு 16 - 07 - 2003

அமரர்
**இராமலிங்கம் சிதம்பரநாதர்**

எமது பாடசாலையின் ஸ்தாபகரும், எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறியவருமான அமரர் இராமலிங்கம் சிதம்பரநாதர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்.*

ஆசிரியர் நலன்புரிக்கழகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(21525) (25-11-18-31)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 07 - 1921



மறைவு 17 - 08 - 2002

**டாக்டர் தம்பு இராசையா**

(இளைப்பாறிய வைத்திய அதிகாரி)

*'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படுவர்'*
மனிதரில் மாணிக்கமாய்த் திகழ்ந்த ஐயாவே!
புனிதப் பிறவியில் புண்ணியம் தான் செய்தீர்!
இனி எப்போது காண்போம் உங்கள் திருமுகத்தை
ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.
Slazenger x1 Sports Club, Colombo - 13.

*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.*

(21486) (26-11-18-31)


**பட்டதாரியாக அரிய வாய்ப்பு**

(தபால் மூலம்)

**தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மூலம்**
தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில்
பட்டம் பெறலாம் B.A. (தமிழ்)

தகைமைகள்

க.பொ.தர உ/த பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்

(க.பொ.த உ/த, சா/த பரீட்சையில் தேர்ச்சி பெறாதவர்கள் நுழைவுத் தேர்வு மூலம் இக்கற்கை நெறியைத் தொடரலாம்)

மேலதிக விவரங்களுக்கு:

தனா சர்வதேச (வரையறுக்கப்பட்ட) கல்வி நிறுவனம்
16, மிலாகிரிய வீதி, பம்பலப்பிட்டி.
கொழும்பு -04.
தொலைபேசி: 074-510456/457, 506968.

(29575) (11-18-31)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதோர் வாய்ப்பு!

## ரஷ்யாவில் மருத்துவக்கல்வி

யாழ்ப்பாணத்தில்
★ இன்று மட்டும் 17.08.2003 ஞாயிறு நேரில் சந்திக்கலாம்.

SOMLENSK STATE MEDICAL ACADEMY
DOCTOR OF MEDICINE (MD)
MEDICINE - 1800 US $
(ANNUALLY) 6YEARS (ENGLISH MEDIUM)
2003 / 2004 கல்வியாண்டு SEPTEMBERஇல்
ஆரம்பமாகின்றது. விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
ADMISSION மற்றும் மேலதிக விவரங்களைப்பெறலாம்.
வழங்குபவர் - விடுமுறையில் இலங்கை வந்துள்ள மருத்துவ மாணவன்.

*COLOMBO -*
19-B, Pokkuna Road,
Kawadana, Dehiwela.
T.P.: 01-2736240 / 0777-316273.

T.SAYANTHAN, 'SUBASTHAN'
672, K.K.S. Road,
Jaffna.
T.P.: 222-2536, 5325.

(சி-29578) (31-13-16)



## மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு உதவ அயர்லாந்து நிபுணர்கள் வருகை

அயர்லாந்து நாட்டிலிருந்து சிறப்புத் தேர்ச்சிபெற்ற 9 பேர் அடங்கிய நிபுணர் குழு யாழ்ப்பாணத்தில் பரியோவான் கல்லூரியில் இம்மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளைப் பரிசோதித்து மதிப்பீடு செய்து அவற்றிற்குரிய பயிற்சி நெறிகள் அடங்கிய ஆலோசனைகளை வழங்கவுள்ளது.

இந்த ஆலோசனைகளைப் பெறவிரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு முன்கூட்டியே பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

குறிப்பிட்ட அளவு பிள்ளைகளை மட்டுமே நிபுணர்களால் மதிப்பீடு செய்ய முடியுமானதால் முன்கூட்டியே உங்களைப் பதிவுசெய்து உங்களுக்கென குறிப்பிட்ட திகதியையும், நேரத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

Millennium Institute For Children With Special Needs,
C/o Promoters Engineering Company Limited,
844, Point Pedro Road,
Nallur, Jaffna.
தொலைபேசி இல.: 021-222 5780.
(சி-29531) (31-13-16)

இந்நிகழ்வின் அனுசரணை : அரிமா சங்கம். கொழும்பு உள்வட்டம்.



## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட். யாழ்ப்பாணம். கே.கே.எஸ்.றோட். இணுவில்.
இரு இடங்களிலும்.

A/L DAY CLASS

புதிய பிரிவு ஆரம்பம் – 18.08.2003 திங்கள் 8.00 a.m. (ப.மு.)

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P. சர்மா | R.P. சர்மா, ஜெயசுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| அரசியல் | றஜீவன் | றஜீவன் |
| நாடகமும் அரங்கியலும் | சுகந்தன் | சுதன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

நீங்கள் விரும்பிய இடங்களில் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளலாம். (21533) (31-13-16)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

உதிப்பு
12 - 10 - 1931



உதிர்வு
18 - 07 - 2003

## திருமதி சிவகுரு நல்லம்மா.

திங்கள் ஒன்று சென்றதுவே!
எங்கள் துயர் ஓயவில்லை
எங்கிருந்தாலும் ஓடிவந்து
எம் துயர் போக்கும் அம்மா!

இன்று (17.08.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*சாவகச்சேரி வடக்கு.*
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(C29581) (32-13-16-31)


நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை

A/L 2003
கலை, வர்த்தகம்
DAY CLASS
ஆரம்பம் 18.08.2003
MON: 8.30 a.m.
(21522) (32-16-17-31)



## இரசாயனவியல்

GROUP CLASSES
DIAS B.Sc.(Hons) Spl.in Chem.
- GENERAL
- INORGANIC
- ORGANIC
- PHYSICAL

(துரித மீட்டல் வினா - விடை)
✪ முழு அலகு உள்ளடங்கலான Paper Class
(விரைவில் ஆரம்பம்)
74,Palaly Rd,Thirunelvely.
(21439)(31-16-17)



## நாகம்ஸ் சுன்னாகம்

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
சரத்குமார், தேவயாணி,
நெப்போலியன், விவேக் நடித்த
தென்காசிப்பட்டணம்
காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00
(31-16-17) (C29232)



## நிறஞ்சனாஸ்

சங்கானை

அர்ஜுன், கிரண் நடித்த
பரசுராம்
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
BLUE STREAK
தினசரி 8.45 இற்கு.
(C29213) (31-16-13)



## லஷ்சுமி சினிமா

இணுவில்



ரம்யாகிருஷ்ணன்,
லிவிங்ஸ்டன், மூர்த்தி
ஆகியோர் நடித்த
அன்னை காளிகாம்பாள் ரீலீஸ்
சிறுவர்கள், பெரியோர்கள் குடும்பத்துடன் பார்க்கக் கூடிய படம். 11.00, 2.00, 7.00 (புதியநேரம்).
(21497)



## ராஜா யாழ்ப்பாணம்



எதிர்வரும் 28ஆம் திகதி வரை
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு.
விஜயகாந்த், கிரண், விவேக்
நடித்த
தென்னவன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(C/29233) (31-16-11)



## லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார், சிம்ரன், வையாபுரி,
மணிவண்ணன்
அரசு (ரீலீஸ்)
தினசரி 3.00, 7.00
காலை 11.00 THE PEACE KEEPER
(C/29373) (31-16-13)



## விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள
விற்பனையாளர்கள் உடன்தேவை.
நேரில் வரவும்.

மகாநதி புடைவை அகம்
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C/29579) (29-13-16-31)



## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்.

ஸ்ரீ சோட்டா நிக்கரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப்பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்கபரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!
இரண்டாவது தடவையாக விஜயம் செய்துள்ளார்.

மணிசாமி P.T.R. ஈஸ்வரி அம்மா
*யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்)*
*இல. 54. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்*
*(வெலிங்டன் சந்தி அருகில். பெருமாள் கோயிலடி.)*
பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.
(31-13-16) (21531)


## துயர் பகிர்கின்றோம்

எங்களது அன்பு நண்பன்
பி.சசிகரன் (பிரான்ஸ்) அவர்களின்
அன்புச் சகோதரி
திருமதி விஜிதா ஸ்ரீகணேஸ்
அவர்களது திடீர் மரணத்தினால் துயருறும் அவர்களது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

(21537)(31-13-16-17) - நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### ஸ்ரீபன் செல்வராசா நல்லையா

அல்வாயைச் சேர்ந்த ஸ்ரீபன் செல்வராசா நல்லையா அவர்கள் நேற்று (16.08.2003) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேல் நல்லையா தம்பதிகளின் அன்பு மகனும் திரு.திருமதி றாபேட் நவரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சாந்ததேவியின் அன்புக் கணவரும் மகிமைச்செல்வன், அருள்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் திருமதி மலர் தங்கத்துரை, திருமதி ரஞ்சி அழகக்கோன், லிடியா சபாரெட்ணம், மணிராஜகுணநாயகம், டேவிட் நல்லையா, பிறாங் நல்லையா, ராணி செபரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (18.08.2003) திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அராலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி வடக்கு,*
*வட்டுக்கோட்டை.* (21530) (29-13-16-31-17)

தகவல்:
N.சத்தியமூர்த்தி
(ஆசிரியர்).




நாளைமுதல்

புதிய முகவரியில்

கணனித்துறையில்
Software Training
Software Development
Service & Maintenance
Computer Repair
எனும் துறைகளில் சிறந்த
நம்பகமான சேவைகளை வழங்குவதில்
வடபகுதியில்
முன்னோடிகளான
நாம்
பலரின் வேண்டுகோளுக்கிணங்க
கணனி விற்பனையையும் (Computer Sales)
வழங்கி எமது சேவையை மேலும் விஸ்தரிப்பதற்காக
நாளைமுதல் 73, பலாலி வீதி, கந்தர்மடம்
எனும் முகவரியில் இயங்கவிருக்கின்றோம் என்பதை
எமது வாடிக்கையாளர்களான
அரச,
அரசசார்பற்ற,
தனியார்துறையினர்
அனைவருக்கும்
அறியத்தருவதில் மிக்க மகிழ்வடைகிறோம்.

நம்பகத் தன்மையுடன் நடந்துகொண்டிருப்பார்கள்

STP Your Partner in IT Solutions
73, Palaly Road, Kantharmadam
T.P: 0212222674


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதிகளின் அசட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ், சரியான நேரத்திற்கு புறப்படத் தவறியது. இதனால், பயணிகள் விசனமடைந்தனர். பயணிகளின வேண்டுகோளுக்கிணங்க பிறிதொரு பஸ் சுமார் முப்பது நிமிடங்கள் கழித்து முகமாலை நோக்கிப் புறப்பட்டது.

கைதடிச் சந்தியை அந்த பஸ் சென்றடைந்தபோது, அப்பகுதியில் இராணுவத்தினர் திடீர் தடைகளை போட்டு வாகனங்களை மறித்து சோதனை நடத்திக்கொண்டிருந்தனர்.

ஏறகனவே தாமதமாகப் புறப்பட்ட மேற்படி பஸ் இராணுவத்தினரின் சோதனையை முடித்து புறப்பட்ட அதேநேரத்தில் முகமாலையில் இருந்து யாழ் நோக்கி வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பிறிதொரு பஸ்ஸும் இராணுவத்தின் போட்டிருந்த தடைக்குள் நுழைந்ததால் இரண்டு பஸ்களும் மேற்கொண்டு நகர முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால், இரு சாரதிகளுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. சாரதிகள் இருவரும் தத்தமது பஸ்ஸை பின்நகர்த்தி போக்குவரத்துக்கு வழிவிட மறுத்தனர்.

அப்பகுதியில் நின்ற இராணுவத்தினர் கேட்டும் அவர்கள் பஸ்ஸை பின்புறம் நகர்த்தாமல் பிடிவாதம் காட்டினர். இதனால், போக்குவரத்து ஸ்தம்பித்தது. அப்பகுதிக்கு வந்த வாகனங்கள் அனைத்தும் வரிசையாகக் காத்துநின்றன.

நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து மக்கள் விசனமடைந்திருந்தனர். படையினர் தமது தடைகளை விலக்கி போக்குவரத்துக்கு வழியேற்படுத்திக் கொடுத்தனர். இதனையடுத்து அப்பகுதியில் வழமை நிலை திரும்பியது. (ம-15)


CHEMISTRY
CENTRE
Temple Rd, நல்லூர்.
BIOLOGY
DAY CLASS
ஆரம்பம் 18.8.03
Mon, Fri-5-6 p.m.
By: தற்பரன்
ஏனைய பாடங்களும் நடைபெறுகின்றன.
(C21593) (32-29-13-16)


# காணியமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் வந்திருந்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிர்ப்புக் காட்டுவதற்கான முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டமையும் காணி அமைச்சரின் விஜயம் பற்றிய விவரங்கள் இரகசியமாகப் பேணப்பட்டமைக்கான காரணங்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் ஜோன் அமரதுங்க கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்த மறுநாள் காணியமைச்சர் இங்கு வருவதாக இருந்தது. எனினும் அமைச்சர் அமரதுங்கவின் விஜயத்துக்கு யாழ். செயலகம் முன்பாக எதிர்ப்புத் தெரிவிக்க எடுக்கப்பட்ட முஸ்தீபுகளையடுத்து அமைச்சர் ராஜிதவின் குடாநாட்டு விஜயம் ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

# இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு நாளும் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் வந்து கலந்துரையாடுகிறார்கள். நாம் எங்களுடைய கருத்துக்களை அவர்களுக்குத் தெரிவிக்கின்றோம். இதன்மூலம் அவர்களுடைய நிலைப்பாடும் தெரிய வருகின்றன.

அநேகமாக அவர்களுடைய எதிர்பார்ப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்திற்குக் கீழ் இந்த இடைக்கால நிர்வாக சபை இருக்க வேண்டும் என்பதுதான்.

தமிழ்க் கட்சிகள் விடயத்தில் ஜனநாயக வழியில் மக்களினால் அங்கீகரிக்கப்பட்ட சக்திகள் தொடர்பாக நாம் கண்டிப்பாக கரிசனை கொள்ளவேண்டும். ஆனால், ஈ.பி.டி.பி, வரதர் அணி போன்ற அமைப்புகள் முற்றாக மக்களால் புறக்கணிக்கப்பட் அமைப்புகள். இறுதியாக நடந்த தேர்தலிலே ஈ.பி.டி.பியினர் செய்த மோசடிகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அவ்வாறு செயற்படும், மக்களால் நிராகரிக்கப்பட்ட இந்தக் குழுக்களை சட்டவிரோதக் குழுக்கள் என்றே மக்கள் கருதுகின்றனர். அவ்வாறான சட்டவிரோதக் குழுக்களை நாங்கள் எதில் இணைக்கவேண்டும் என்பது எமக்குப் புரியாமல் இருகின்றது.

இது தொடர்பாக என்னை விட பொதுமக்களுக்கு அதிகமாக தெரியும். அவர்களை நேரடியாக நீங்கள் தொடர்புகொண்டு கேட்டாலே அவர்கள் இதற்கான தகுந்த பதிலைச் சொல்வார்கள் - என்றார். (ம-6)

# தாய்லாந்து தூதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் திட்டம் ஒன்றை முன்னெடுக்க தாய்லாந்து அரசு உத்தேசித்துள்ளமை குறித்து தாய்லாந்துத் தூதர் விளக்கினார்.

இந்தத் திட்டத்தின் கீழ் 40 பேருக்கு கண்ணிகளை அகற்றும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக 20 பேருக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

500 பேர் வரையிலானோருக்கு செயற்கை உறுப்புக்களை தயாரிப்பதற்கான உதவிகள், கிராமிய அபிவிருத்திக்கான உதவிகள், மக்களுக்கு வருமானம் தரும் வகையிலான திட்டங்களை செயற்படுத்துவதற்கான உதவிகள் என்பன தாய்லாந்து அரசின் உதவித் திட்டத்தில் அடங்கியுள்ளன.

தமது உதவித் திட்டங்கள் அடுத்த மாதத்தில் இருந்து செயற்படுத்தப்படும் என்று தாய்லாந்துத் தூதுவர் தெரிவித்தார்.

இதேவேளை -

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகளுக்கு தாய்லாந்து பூரண ஒத்துழைப்பினை வழங்கும் என்றும் அவர் தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் தாய்லாந்துத் தூதுவர் தலைமையிலான குழுவினர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குச் சென்று அதன் பணிகள் குறித்தும் கலந்துரையாடினர்.

தாய்லாந்துத் தூதுக் குழுவில் அந்நாட்டு கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான லெப்டினன்ட் கேணல் தர அதிகாரி ஒருவரும் கலந்துகொண்டார்.

விடுதலைப் புலிகளின் சார்பில் தமிழ்ச்செல்வனுடன் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் மற்றும் ஜோர்ஜ் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம-6)


கணக்கீடு
A/L 2004 DAY CLASS
ஆரம்பம் : நாளை
நேரம்: அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
ஆசிரியர்: S.தவா
B.Com.(Hons) (Acc.Spl.)
NEW SCIENCE COLLEGE, JAFFNA.
(21536) (32-13-16-29)

BEACON
யாழ் நகர்
A/L DAY CLASS
கலைப்பிரிவு
Log.:- மனோகரன். 7-8 செ.,வி.
TAM.:- நாகதமிழிந்திரன். 7-8 தி.,பு.,வெ.
H.C.L.:- ஸ்ரீஸ்
DRM.:- T.J.சுதன். 8-9. செ.,வெள்.
ECO.:- மோகன். 9-10.தி.,பு.,வெ.
Geo.:- S.R.பாலா. சனி, ஞாயிறு. 11 மணி
ஆரம்பம் 18.08.2003
Mon: 7 a.m.
(21474) (32-29-13-16)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
17& 20 August 2003
- Ms Office XP
- Visual Basic
- Desktop publishing
- Web designing (HTML)
- Hardware
காலை, மாலை நேர வகுப்புகள்
வசதிக்கேற்ற நேர ஒழுங்குகள்,
குறைந்தளவு அனுமதிகள்
தனிப்பட்ட கவனிப்பு
அனுமதிக்கு முந்துங்கள்.
GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
INDIAவின்
சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்
College of Computer Studies
302/1, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(21516) (32-16-29-13)

ஒலிபெருக்கி சாதனங்கள் விற்பனைக்கு
SSA 250M - 250W அம்பிளிபயர்
SSB 80EM - 80W அம்பிளிபயர்
AMX 912 - 9 சனல் மிக்ஸ்சர்கள்
HMT 30 - லைன் ரான்ஸ்போமர்கள்
40 WATS யூனிற்றுக்கள்
G.S. 18",24" நீளக்கோண்கள்
அனைத்தும் புதியவை.
தொடர்பு:-
'கோபுரம் சவுண்ட்ஸ்
அவுஜா ஒலிபெருக்கி சாதனங்கள விற்பனையாளா.
M.மயூரன்
மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(21107)


## முக்கிய அறிவித்தல்

ரேடியோ மார்க்கோனி என்று அழைக்கப்படுகின்ற
**வேலாயுதம் மோகன்** அவர்கள்
அகாலமரணமடைந்துவிட்டார்.
அவரிடம் திருத்துவதற்காக ஒப்படைக்கப்பட்ட
சகல மின்சார உபகரணங்களும்-
இன்று 17-08-2003 ஞாயிற்றுக்கிழமையும்
நாளை 18-08-2003 திங்கட்கிழமையும்
அவரது கடையில் வைத்து
திரு.க.இராசதுரை J.P. அவர்கள்
முன்னிலையில் மீள ஒப்படைக்கப்படவுள்ளன.
ஆகவே, உரிய பற்றுச்சீட்டுக்களுடன் வருகை தந்து ஆதாரங்காட்டி அவற்றின் உரிமையாளர்கள் தங்கள் தங்கள் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

சிவன் வீதி,
ஆவரங்கால். (21520) (32-29-13)

திரு.வே.கலாதரன்
(சகோதரன்)


D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(இந்து குருகுலத்திற்கு முன்பாக)
A/L DAY CLASS
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - முகுந்தன்
வணிகக்கல்வி - உமாகாந்த்
அளவையியல் - உதயா
தமிழ் - அருள்
இந்து நாகரீகம் - ஸ்ரீஸ்
நாட.அரங்கியல் - சுதன்
புவியியல் - குமரன்
ஆரம்பம் - 18.08.2003
திங்கள் 8.00 மணி
(பழைய நேரம்)
S.வரதராஜன். இயக்குநர்
D.C.M
(21419) (29-13-16)

விற்பனையாளர்கள் தேவை
புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.
தொடர்புகளுக்கு:
த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(21367) (32-16-17)


## மரண அறிவித்தல்

### கந்தையா கதிரவேலு

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் தலங்காவற் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கதிரவேலு (13-08-2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பொன்மலரின் அன்புக் கணவரும் சித்திரரஞ்சினி, ஜெயந்தி, ராம்குமார், சிவகுமார், இராஜ்குமார், கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகனதாஸ், ஸ்ரீநடராசா, சுகந்தி, லதா, சுகன்யா, ஜெயானந்தராசா, தனபாலன் ஆகியோரின் மாமனாரும் சாரங்கன், சரண்யா, ஜனகன், பிரதீபன், திவானி, சிவானுஜன், வானுஜா, சௌமிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஞானசேகரத்தின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2003) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*தலங்காவற்பிள்ளையார் கோயிலடி,*
*திருநெல்வேலி.* (21540) (29-13)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


உங்கள் எதிர்காலத்தை
நீங்களும் பிரகாசிக்கச் செய்யலாம்!
இன்றே இணையுங்கள்!!
பிரசன்னா கணனிக் கல்வி நிலையம்
K.K.S. வீதி, சுன்னாகம்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 18.08.2003
★Dip. in MS Office ★Dip. in Desktop Publishing
★Hardware Engineering
Indra Graphics





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.